Registered as a NewsPaper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 07 ( 20 - 03 - 1992 ) வெள்ளிக்கிழமை ஓசை: 31

## க. பொ. த. (உ/த) பரீட்சை ஏப்ரலில் நடைபெறும்

கல்விப் பொதுத் தராதர உயர்தர விசேட பரீட்சைகள் அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் முப்பதாம் திகதி வரை நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்துள்ளார். கடந்த வருடம் ஆகஸ்ட்மாதத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு கிளிநொச்சி ஆகியபகுதிகளில் தடைப்பட்ட பரீட்சைகளுக்கு பதிலாக இந்த விசேட பரீட்சைகள் நடைபெற உள்ளதாகவும் பரீட் (8ஆம் பக்கம் பார்க்க)

### —மூன்றாவது நாளாக—

# மணலாற்றில் உக்கிர சண்டை

# எறிகணை, குண்டுவீச்சு தீவிரம்

(மணலாறு)

மணலாற்றில் மூன்றாவது நாளாக நேற்றும், விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. விமானப்படை, கடற்படையின் உதவியுடன் இராணுவம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையின் காரணமாக மணலாற்றுப் பிரதேசம் குண்டுவீச்சால் அதிர்வதாக மேலும் தெரியவருகிறது.

கடந்த பதினேழாந் திகதி ஆரம்பித்த ‘ஜயபார’ இராணுவ நடவடிக்கையில் புலிகளின் அதிரடித்தாக்குதலினால் பேரிழப்பைச் சந்தித்து நிலைகுலைந்த இராணுவ அணியினர் தற்பொழுது பலத்த குண்டுவீச்சு, எறிகணை, பீரங்கித்தாக்குதலை நடாத்தி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து நடந்துவரும் இத்தாக்குதலினால் மணலாற்று கரையோரப் பிரதேசமும், காட்டுப்பிரதேசமும் அதிர்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இப்பகுதி இராணுவ முகாம்களிலிருந்து அளம்பில், செம்மலை பகுதிகளை நோக்கி பலத்த எறிகணை வீச்சுகள் இடம்பெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை நடைபெறுவதாகவும் கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிலிருந்து இருமனைகளில் வெளியேறிய இராணுவத்தினரை புலிகள் தொடர்ந்தும் தாக்கி வருவதாகவும் தெரியவருகின்றது.

## ஹமில்டன் வனசிங்கா மணலாறு விரைவு

(கொழும்பு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா படை மேற்கொள்ளும் ‘ஜயபார’ இராணுவ நடவடிக்கையைப் பார்வையிட இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா நேற்று விமான மூலம் மணலாறு சென்றார்.

குறைந்தபட்சம் மேலும் பத்துப் புலிகளின் தளங்களையாவது கைப்பற்றவேண்டுமென்று லெப் ஜெனரல் கூறியதாகக் கொழும்புப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளதாக பி. பி சி. தெரிவித்தது.

வடபகுதியில் தமது தாக்குதல் தொடர்ந்தும் நடைபெற்றுவருவதாக சிறிலங்கா இராணுவம் அறிவித்துள்ளது.

## முல்லையில் குண்டுவீச்சு; மனைவிபலி கணவன்காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவக்குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சினால் இளம் குடும்பப் பெண் உடல்சிதறிப் பலியானார் அவரது கணவன் உட்பட இருவர் படுகாயமடைந்ததுடன் மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நேற்றுக்காலை ஒன்பதுமணியளவில் முல்லைத்தீவில் உள்ள தனியூற்று பகுதியை வட்டமிட்ட இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மக்கள்குடியிருப்புகளைநோக்கி தொடர்ச்சியாக மூன்று குண்டுகளை வீசின. இவை வீழ்ந்து வெடித்ததில் சௌ சுமதி (வயது 25) ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியானார். க.சௌந்தரராஜா(28) சுபாசினி (16) ஆகியோர்படுகாயமடைந்தனர்.

## ஹோட்டலில்குண்டுவெடிப்பு மட்டக்களப்பில் இருவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்றுக் காலை குண்டொன்று வெடித்ததில் இருவர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் முஸ்லிம்; மற்றவர் சிங்களவர். முஸ்லிம் ஹோட்டல் ஒன்றிலேயேஇக்குண்டு வெடித்தது குறிப்பிடத்தக்கது.

## நிவாரணம் வழங்கக் கோரி மீனவர் ஆர்ப்பாட்டப் பேரணி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் தொழில்இழந்த ஆயிரக்கணக்கான மீனவர்கள் தமக்கு நிவாரணம் வழங்கும்படிகோரிக்கைவிடுத்தும், நிவாரணம் நிறுத்தப்பட்டதைக் கண்டித்தும் நேற்று ஆர்ப்பாட்டம்செய்து ஊர்வலம்நடாத்தியுள்ளனர்.

நவாலி, சாவகச்சேரி, ஆனைக்கோட்டை, உயரபுலம், மானிப்பாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பாதிக்கப் [8 ஆம் பக்கம் பார்க்க]

## வெற்றிலைக்கேணியிலிருந்து அகோர எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு இராணுவ முகாமிலிருந்து நேற்றுபகல் முதல் பலத்த எறிகணைத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த எறிகணைகள் புள்ளாவெளி, கொம்படிப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளன. இந்த எறிகணைவீச்சு இடைவிடாது தொடர்ந்தும் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடமராட்சிப் பகுதியை நோக்கி பலாலி முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதல்களும் கடற்படைப் பீரங்கிப்படகுகளின் பீரங்கித் தாக்குதலும் தொடருவதாக தெரியவருகிறது.

## மட்டு. இராணுவநடவடிக்கை புலிகளால் முறியடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பிரேசன் ரேசர் நடவடிக்கை புலிகளின் தாக்குதலால் முற்றாகச் செயல் இழந்துள்ளது.

கடந்த புதன்கிழமை கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிலிருந்து புலிகளைத் தேடிப் புறப்பட்ட 300க்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்ட அணியொன்றின் மீது விடுதலைப் புலிகள் முந்திரியம் பள்ளம் என்னும் இடத்தில் வழிமறித்து [8 ஆம் பக்கம் பார்க்க]

## வீரவணக்கம்

### கப்டன் சேது, லெப். தீபன், 2 ஆம் லெப். விதுரன், ஆண்டாள்

மட்டக்களப்பு மாவட்டம் முந்திரியம் பள்ளத்தில் கடந்த புதன்கிழமை சிறிலங்கா இராணுவத்துடனான கடும் மோதலில்கப்டன்சேது(சின்னத்துரை ரவிச்சந்திரன் - கோவில்போரதீவு), லெப். தீபன் (சுந்தரம் சுதாகரன்-ஆண்டான்வெளி), 2 ஆம் லெப். விதுரன் (கந்தையா ஜீவா - துனுகலை தோட்டம்) ஆகிய மூன்று போராளிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர்.

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் தொடர்ந்து இடம் பெற்று வரும் மோதல்களில் நேற்று [8 ஆம் பக்கம் பார்க்க]

## கடற்றொழிலாளர் நிவாரணம் மாற்றமில்லை

(யாழ்ப்பாணம்)

இராணுவநடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு சுழற்சி முறையில் உலர் உணவு வழங்கப்படும். இதில் மாற்றம் எதுவும் தற்போதைக்கு நடைமுறைக்கு வராது. இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சுமார் 5,000 கடற்றொழிலாளர்களுக்கே தற்பொழுது சுழற்சி முறையில் இரு வாரங்களுக்கு உலர் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

[8 ஆம் பக்கம் பார்க்க]

### உணர்வு பூர்வமாக

## அன்னை பூபதியின் நினைவுநாள் ஆரம்பம்

தமிழீழ தியாகி அன்னை பூபதியின் சாகும் வரையான உண்ணாவிரத நான்காவது ஆண்டு ஆரம்பநிகழ்வு நாள்நேற்று யாழ். மாவட்டம் முழுவதும் ஆரம்பமாகியது.

மக்கள்நேற்றுவீதிகள்தோறும் கொட்டகைகள் அமைத்து அன்னையின் உருவப்படத்தை வைத்து அதற்கு மலரஞ்சலி செலுத்தியதை அவதானிக்க முடிந்தது.

இந்தநாளைநினைவுகூர்ந்து அரியாலை சனசமூக நிலையம் முன்பாக அமைக்கப்பட்டிருந்த நீண்ட கொட்டகைக்குள் ஆறு அடி உயரமான அன்னை பூபதியின் உருவப் படம் வைக்கப்பட்டிருந்தது.

அங்கு நடைபெற்றஉண்ணாவிரதத்தில் ஆயிரக் கணக்கான பாடசாலை மாணவ, மாணவிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

மாலையில் அங்கு பொதுக் கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

[8 ஆம் பக்கம் பார்க்க]

### அன்னை பூபதி

## நினைவுக் கூட்டமும் உண்ணாவிரதமும்

(யாழ்ப்பாணம்)

அன்னைபூபதி அவர்களின் நினைவாக சங்கானை வட்டவைப் பிரிவில் இன்று அடையாள உண்ணாவிரதமும் பொதுக் கூட்டமும் பண்டத்தரிப்பு பனிப்புலம் அம்மன் கோவிலடியில் நடைபெற உள்ளது.

காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை அடையாள உண்ணாவிரதமும் மாலை ஏழு மணிக்கு பொதுக் [8 ஆம் பக்கம் பார்க்க]

## விசேட அறிவித்தல்

நாளை 21. 03. 92 சனிக்கிழமை நடைபெற உள்ள மாபெரும் கிரிக்கட் போட்டிகளை முன்னிட்டு மாணவர்கள் விடுத்துள்ள கோரிக்கைக்கு அமைவாக அன்றைய தினம் யாழ். கோட்டத்திலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும், ஏனைய அண்மித்த கல்வி நிறுவனங்களும் மூடி ஒத்துழைக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

பொதுச்செயலாளர்
**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
யாழ். மாவட்டம். (2313)

## ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
23 - 10 - 1968



தமிழீழ மண்ணில்
20 - 3 - 1991

### வீரவேங்கை டெனின்
### (வெற்றிவேல் ஞானரூபன்)

தமிழீழ மண்காக்க தரணியில் வந்துதித்தான்
தன்மானம் கொண்ட ஞானரூபன் (டெனின்)
பருவ வயதினிலே கண்ணிரண்டாம் ஈழம் வேண்டி
பயிற்சியும் பெற்று உயர்ச்சியும் பெற்றாய்!

உள்ளத்தால் உருவத்தால் உயர்ந்திட்ட மறவா - நீ
ஈழத்தின் இதயத்தில் இடம் கொண்டாயடா
மண்ணையும் மணித்தமிழையும் - மலர்
ஈழத்தின் கண்ணெனக் கண்டு - அதை
காப்பதற்காய் துப்பாக்கி சுமந்து
தப்பாது பல களம் கண்டாய்
சிங்கள வெறியரின் சிலாவத்துறை
முகாமதனை தகர்ப்பதற்கு
பகைவரின் பாசறைக்குள் படையோடு பாய்ந்தாய் நீ
வழி மேலே விழி வைத்துக் காத்திருந்த ஈழமது
வழியதுவே கலங்கிட மாவீரனாக வந்தாய்!
ஓராண்டு கடந்தாலும் உன் நினைவலைகள்
ஓயாது ஒலிக்கும் எம் நெஞ்சங்களிலே!

உன் பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்.**

அன்னாரின் முதலாம் ஆண்டுத் திதி .20. 03. 92 இன்று வெள்ளிக்கிழமை பகல் 12. 30 மணிக்கு நடைபெறும், இந்நிகழ்வில் இயக்க உறுப்பினர்களையும், நண்பர்களையும் உறவினர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

42/,3, ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (சி3942)


## நீமியா
## உரம்

வெங்காயப் பயிருக்குச் சிறந்த அடி உரம்
பயிருக்குப் பாதுகாப்பளிப்பதுடன்
சிறந்த விளைச்சலையும் தருகிறது

"நீமியா உரம்" வேம்பின் ஆதாரம்
கிலோ பைக்கற் ஒன்றின் விலை
**ரூ. 15 / மட்டுமே!**

**மொத்தக் கொள்வனவில் கழிவு உண்டு.**
**அண்ணா கோப்பி**
**கடைகளிலும் கிடைக்கின்றது.**

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**
(4055)


### உயர் குழாத்தின்

கட்சியைக் கவர்ந்தது. சமூக மாற்றத்தின் அத்தியாவசியம் தி. மு. கவைத் தோற்றுவித்தது. ஆனால் அண்ணாத்துரை மிகவும் சாமர்த்தியமான ஒரு தந்திரசாலி என்ற வகையில் தனது பதவி நிலைத் தேவைக்கேற்ப புரட்சிச் சூழலைச் சிதைத்துக் கொண்டார். மிக இலகுவில் சமரசவாகியானார். தமிழரசுக் கட்சியிடம் புரட்சிச் சுபாவம் சற்றும் இருக்கவில்லை. தி. மு. க. விடம் ஆரம்பத்தில் ஓரளவு நாஸ்திகச் சுபாவம் இருந்தது. தமிழரசுக் கட்சியிடம் நாஸ்திகச் சுபாவம் சிறிதளவும் இருக்கவில்லை. தி. மு. க. விடம் ஆரம்பத்திற் காணப்பட்ட நாஸ்திகச் சுபாவம் வாக்கு வேட்டையின் தேவையின நிமித்தம் படிப்படியாகக் கரையலாயிற்று. '' ஒன்றே குலம், ஒருவனே தேவன் '' என்ற கோஷத்தை அண்ணாத்துரை முன்வைத்தார். இதன் மூலம் நாஸ்திகத்திலிருந்து தி. மு. க. விடுபட்டதாக வெளிப்படையாக அமைந்தது இந்நிலையில் தமிழரசுக் கட்சிக்குத் தி. மு. க. வில் காணப்பட்ட நாஸ்திகம் பற்றிய நெருடல் சற்றும் இல்லாதுபோனது. தி, மு. க. நடாத்துகின்ற கட்சியின் மாநில மாநாடுகளின் பாணியில், அதே பெயருடன் தமிழரசுக் கட்சியும் வருடா வருடம் மாநில மாநாடுகளை நடாத்தியது. இந்த நிலையிலும் அரசியல் உணர்வை எமக்கென்று சொந்தமற்றதாகவே தமிழரசுக் கட்சி இந்தியாவிடமிருந்து கடன்பட்டது. அயல் நாடுகளிடமிருந்தோ அல்லது உலகின் ஏனைய நாடுகளிடமிருந்தோ நல்லவற்றைக் கடன் பெறுவதில் ஒருபோதும் தவறில்லை. ஆனால் அரசியல் சிந்தனை எம்மிடம் தோன்ற மறுத்தது என்பதும், பொதுவாக வேறு எங்காவது உருவாகி அது அங்கீகாரம் பெற்றுவிட்டால் பின்பு அதனைப் பின்பற்றும் ஒரு போக்கைத் தான் நாம் அதிகம் கொண்டிருந்தோம் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது. நாமாகவே ஒன்றைத் தொடங்கி அதனை ஒரு பொதுவிதியாக்க முன்னெடுகின்ற சிந்தனைத் தற்துணிவின்மை பெருமளவு இருந்துள்ளது

இத்தகைய சமூகப் பின்னணியைக் கொண்ட சூழலில் தமிழீழ விடுதலைப் புலிகள் தாமாகவே ஒரு போராட்ட முறையை முன்வைத்து அதனை முன்னெடுத்தமை ஒரு புரட்சிகரமான அம்சமே தான். இதன்பால் திடசித்தத்துடன் செயற்பட்டமை எமது சமூகத்தின் மரபுவழிப் போக்கிற்கு வேறானதும் புதியதும்தான். தமிழ் மக்களின் அரசியல் சிந்தனை ஓட்டத்தில் இதற்கென புரட்சிகரமான ஒரு பங்குண்டு- மக்கள் மத்தியில் ஒரு போர்க் குணத்தைப் புலிகளால் விதைக்க மூடிந்தது. நேரடி ஒடுக்கு முறையாளனான எதிரிக்கெதிராக இத்தகைய போரின் குணாம்சம் சமூகமட்டத்தில் முனைப்புப் பெற்றதுடன் அரசியற் கண்ணோட்டத்திலும் ஒரு சிறு மாற்றத்தைத் தவிர பொதுவாகத் தமிழ்ச் சமூகத்தின் ஏனைய அம்சங்களிலெல்லாம் மரபுவாதிகளின் கரங்கள் வலிமையை இழக்கவில்லை

பொதுவாகத் தமிழ்ச் சமூகத்தின் மரபுவாதிகளிடமும், சமூக மட்டத்தில் உயர்குழாத்தைச் சேர்ந்தவர்களிடமும் வரலாற்று ரீதியாக ஒரு பண்புண்டு. இந்த உயர்குழாத்தினர் இருக்கும் அமைப்புடன் ஒட்டி வாழ்பவர்கள். புதியதற்கு ஆதரவளிக்க மாட்டார்கள். அந்தப் புதிய சக்தி வெற்றிபெற்றால் வென்றதன் பக்கம் மாறுபவர்கள். பின்பு அதன்மீது தமது செல்வாக்கைச் செலுத்துவார்கள். இதன் மூலம் தமது ஆதிக்கத்தைச் சமூகத்தின் மீது தொடர்ந்தும் செலுத்துவார்கள்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நினைவு கூருகின்றோம்

## 1992-03-20

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் பயிற்சியின் போது எதிர்பாராத விதமாகக் குளத்தில் மூழ்கியதில் எமைப் பிரிந்த

**ரசீந்தன்** ( பசுபதி சதீஸ்வரன் - அண்ணா சிலையடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி )

1986ஆம் ஆண்டு நெடுங்கேணியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது தனதுகைக்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய-

**டொனா** ( பாக்கியநாதன் போல்றாஜ் - பாவற்குளம், வவுனியா )

1988ஆம் ஆண்டு மட்டக்களப்பு - புதூர்ப்பகுதியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட -

**யூலி** ( யூலியன் - மட்டக்களப்பு )

திருக்கோணமலை - வில்கம் விகாரைப் பகுதியில் பேரூந்து ஒன்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின் போது கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1990ஆம் ஆண்டு அம்பாறையில் சுகயீனம் காரணமாக எம்மைப் பிரிந்த -

**ஜோண்சன்** ( பா. சதீஸ்குமார் - பெரியஉப்போடை, மட்டக்களப்பு )

1991ஆம் ஆண்டு மன்னார் சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பின் இரண்டாம் நாள் யுத்தத்தின் போது வீரச்சாவெய்திய -

**கப்டன் மொறிஸ்** ( சண்முகம் தவராசா - இடைக்குறிச்சி, வரணி )

**லெப். ஜோனி** ( சத்தியவான் சத்திவேல் - புலோலி தெற்கு, பருத்தித்துறை )

**2ஆம் லெப். ரஞ்சித்தாத்தா** ( கதிர்காமு குணபாலசிங்கம் - பேராலை பளை )

**2ஆம் லெப். அன்ரனி** ( துரைச்சாமி அகிலன் - இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் )

**சிவசங்கர்** (அடைக்கலமுத்து இராசேந்திரகுமார் - சூரியவெளி, நாவாந்துறை )

**திவாகரன்** ( டானியல் யோசெப் சாள்ஸ் - தாமரைக்குளம், அடம்பன், மன்னார் )

**லெப். நாதன்** ( தியாகராசா சிவானந்தன் - இத்தாவில், பளை )

**2ஆம் லெப். சதா** ( மேரிகியூரா தேவராசா - சந்திஒழுங்கை, வல்வெட்டித்துறை )

**2ஆம் லெப். அமபி** ( நாகலிங்கம் கனகரஞ்சன் - புத்தூர், கிழக்கு )

**ஆனோல்ட்** ( கிருஸ்ணபிள்ளை குகன் - பறவைக்கொத்தான் வீதி, இறம்பைக்குளம் வவுனியா )

**மரியநாயகம்** ( சின்னத்துரை - 1ஆம் வட்டாரம், புங்குடுதீவு )

**டெனின்** ( வெற்றிவேலு ஞானக்குமார் - புளியங்கூடல் ஊர்காவற்றுறை )

**சசிக்குமார்** ( சின்னத்தம்பி பத்மநாதன் - 7ஆம் வட்டாரம், குமுழமுனை, மணலாறு )

**மேஜர் ரஞ்சன் | சித்தப்பா** ( செல்வநாயகம் தயாளன் - தம்பசிட்டி, பருத்தித்துறை )

**சூரி** ( வன்னி )

**லெப். தர்சன் / புலவர்** ( யோகசாமி செந்தூரன் - நடராசாவீதி, வல்வெட்டித்துறை )

**லெப். சோமன்** ( விநாயகமூர்த்தி இராசேந்திரன்- கல்வயல், சாவகச்சேரி )

**அனித்தா** ( உதயரஞ்சினி வைரமுத்து - காளிகோவிலடி, கொக்குவில் கிழக்கு )

**லெப். கலா** ( வசந்தி [சாந்தி] இராசரத்தினம் - கடற்கரைச்சேனை, மூதூர், திருக்கோணமலை )

**கஜா** ( பவானி தவநாயகம் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு )

**2ஆம் லெப். காந்தராசா** ( நாகராசா ஜெயக்குமார் - பொலிகண்டி, வல்வெட்டித்துறை )

**சிறி** ( தங்கரட்ணம் நந்தகுமார் - சூராவத்தை, சுன்னாகம் )

**விஷ்ணு** ( கனகரத்தினம் நித்தியானந்தம் - வியாபாரிமூலை, பருத்தித்துறை)

ஆனையிறவில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**சுடர்** ( சீனிவாசகம் சிதம்பரப்பிள்ளை - 3ஆம் வாய்க்கால், பரந்தன் )

திருக்கோணமலை - பொன்னன்காணிப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2ஆம் லெப். பிரதீப்** ( செல்லத்துரை ராஜேஸ்வரன் - மூன்றாம் கொலனி, மூதூர், திருக்கோணமலை)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4072)




அன்பின் மாதவனண்ணா,


இப்போது நான் 'ஓ மரணித்த வீரனே! உன் சீருடைகளை எனக்குத்தா' என்ற பாடலைக்கேட்பது இல்லை. அதை ரசிக்கக் கூடியளவுக்கு எனது மனம் ஒரு நிலையில் இருக்காது 29-11-91 அன்று கொடுவாமடுவில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்புறப்படும் போது நீங்கள் நடந்து கொண்டவிதம் கண்ணில் தோன்றும். உங்களது ட்றவலிங்பாக், புகைப்படஅல்பம், ஷேர்ட் ஜீன்ஸ் எல்லாவற்றையுமே ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றாக பகிர்ந்து கொடுத்தீர்கள். நீங்கள் அணிந்திருந்த ஆடைகள் மட்டுமே எஞ்சியிருந்தன. ஏன் அப்படிச் செய்தீர்கள்? உங்களது வீரச்சாவுத் திகதி இதுதான் என்பது உங்களுக்கு எப்படி இவ்வளவு நிச்சயமாகத் தெரிந்தது?

அந்தத் தாக்குதலில் 12இராணுவத்தினர் கெல்லப்பட்டனர் 11பேர் படுகாயமடைந்தனர் நாம் பல றைபிள்களைக் கைப்பற்றினோம் என்றாலும் சோகத்துடன் தான் முகாம் திரும்பினோம். எமது தளபதி ஜோய் அண்ணா, நீங்கள், றோயல் தீன் ஆகிய நால்வரையும் அந்தத் தாக்குதலில் இழந்தோம், தாக்குதல் முடிந்து வந்ததும் உங்களது ஜீன்ஸ், ஷேர்ட் போன்றவற்றைப் பெற்றவர்கள் அவற்றைக் கையிலெடுத்துக் கொண்டு பட்ட வேதனை ...

'மரணித்த வீரனே' பாடலில் மரணித்தவனிடம் தான் அதைத் தருமாறு குறிப்பிடப்படுகிறது. ஆனால் நீங்களோ மரணிக்கும் முன்னரே அவற்றைத் தந்து விட்டுச் சென்றீர்கள். மரணித்த பின்னர் உங்கள் ஆயுதத்தை மட்டுமல்ல-அத்தாக்குதலில் எல்லோருக்கும்முன்னதாக நீங்கள் ஓடோடிச் சென்று கைப்பற்றிய ஆயுதத்தையும் தந்தீர்கள். இப்போது சொல்லுங்கள் - அந்தப் பாடலை எப்படி ரசிப்பது?

உங்களுக்கு அன்றுதான் வீரச்சாவைச் சந்திப்பீர்கள் என்பது உறுதியாகத் தெரிந்தது. ஆனால் எமக்கு அப்படித் தெரியவில்லை. 'நான் இண்டைக்கு திரும்பி வாறேல்ல' என்று சொன்னபோது வழக்கமாக எல்லாத் தாக்குதல்களுக்கும் போகும் போது சொல்லுவதைத்தான் சொல்கின்றீர்கள் என்று நினைத்தோம் வழக்கத்துக்கு மாறாக உங்களது உடைமைகளைக் கையளித்ததற்கு இப்படியொரு அர்த்தத்தை கற்பிக்கவில்லை. தாக்குதலுக்கு போக வேண்டிய அவசரத்தில் அந்த மாதிரியான சிந்தனைக்கும் நேரம் கிடைக்கவில்லை. இதை நாம் அப்படி நினைக்காததற்கு இன்னுமொரு காரணம் இருந்தது. 'சாவுக்கே உங்களை நெருங்கப் பயம்' என திடமாக நாங்கள் நம்பினோம். வந்தாறுமூலையில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் கழுத்திலும் இடுப்பிலும் காயமுற்று 'இனி பிழைக்கவே முடியாது' என்றிருந்த நிலையிலும் தப்பினீர்கள். யாழ்ப்பாணத்துக்கு வைத்தியத்திற்காக அனுப்பப்பட்டு உங்கள் பழைய குரலை மட்டும் இழந்த நிலையில் திரும்பி வந்தீர்கள். அதனால் உங்களுக்கு இனிச் சாவே இல்லை என நம்பினோம். அப்படியெல்லாம எமக்கு நம்பிக்கையூட்டிய நீங்கள் இந்தத் தாக்குதலில் மட்டும் ஏன் ?

உங்களது காற்சட்டைப் பையினுள் கண்டெடுத்த உங்கள் வாழ்க்கையினைப்பற்றிய குறிப்புகளை நான் வாசித்தேன். அதை நீங்கள் முடிக்கவில்லை. அதை நீங்கள் முடிக்கும் வரை அந்த ரவை (உங்களைச் சந்தித்த) காத்திருக்கவில்லை 'தமிழினம் போராட நிர்ப்பந்திக்கபபட்டுள்ளது' என்ற செய்தியைச் சொல்லும் உங்கள் வரலாறறுக் குறிப்பினை எமது மக்களுக்குச் சொல்கிறேன்



உங்களால் முடிக்கப்படாத அந்த வரலாற்றுக்குறிப்பு இவ்வாறுதான் அமைந்தது.

தமிழீழத்தின் எல்லைப்புறக் கிராமங்களில் ஒன்றாக மல்வத்தையில் கண்ணன் அண்ணாவின் குழுவில் ஒரு உறுப்பினராக இருக்கும் போது தான் மீண்டும் போர் தொடங்கியது நீங்கள் கல்முனைப் பொலிஸ் நிலையம், இராணுவ முகாம் என்பனவற்றின் மீது தாக்குதல் தொடுத்தீர்கள். உங்களது தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத இராணுவத்தினர் உயிரிழந்த தங்கள் சகாக்களின் உடல்கள் ஆயுதங்கள் என்பனவற்றைக் கைவிட்டு கடல் வழியாகத் தப்பிச்சென்றனர்.

தொடர்ந்து அட்டாளைச் சேனை, தன்னாமுனை ஆகிய பகுதிகளில் சிங்களப்படையினருக்குப்பாடம் புகட்டினீர்கள். சமுவங்சேணியில் நீங்கள் நடத்திய தாக்குதலில் குண்டு துளைக்காத கவசங்களால் உங்கள் உயிரைக்காக்க முடியாது என்று அவர்களுக்குப் டூரியப்படுத்தினீர்கள்.



லெப். மாதவன்

இக்காலகட்டத்தில் தான் நீங்கள் எங்களுக்கு அறிமுகமானீர்கள் ஒழுக்கத்திலும் கட்டுப்பாட்டிலும் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கும் நீங்கள் மற்றவர்களும் அதே போலவே இருக்க வேண்டுமென வலியுறுத்துவீர்கள். இவற்றுக்கு மாறாக யாராவது நடக்க முயன்றால் உங்களுக்கு கெட்ட கோபம் வரும். முகாமில் நீங்கள் கவிதை இயற்றுவீர்கள். நீங்களே இயற்றிய பாடல்களை இசையமைத்துப் பாடுவீர்கள். அத்துடன் தேனிசை செல்லப்பாவின் பாடல் என்றால் உங்களுக்குப் பிடிக்கும்.

கொச்சத்தனமான அர்த்தம் கொண்ட பாடல்களை கேட்டு மந்தமாகியிருந்த எங்கள் செவிகளில் புரட்சியும் விடுதலையும் பாயலாயின இந்த இனிமையான வாழ்க்கையில் இடையிடையே தாக்குதலுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் எங்களை உற்சாகமூட்டும். அதிலும் வடமுனைப் பகுதியில் இடம் பெற்ற தாக்குதல்கள் மூன்றும் தனித்தனி வரலாறாயிற்றே. எவ்வளவு ஆயுதங்களைக் கைப்பற்றினோம்? ஒவ்வொரு தாக்குதலின் முடிவிலும் சுமக்க முடியாத சுமைகளுடன் திரும்புவோம். பசி வயிற்றைப் பிடுங்கும். ஆனால் மனதில் நிறைவிருக்கும. கயிற்றின் உதவியுடன் ஆறுகளைக் கடப்பது-முப்பதுக்கும் மேற்பட்ட மைல் தூரத்தை நடந்து வருவது-எதுவுமே துன்பமாயிராது எமக்கு உங்களது பகிடிகள் தான் இவற்றை மறக்க வைத்து விடுமே.

ஜோய் அண்ணாவின் தலைமையில் இடம் பெற்ற சித்தாண்டி பொலீஸ் நிலையத் தாக்குதல் பெற்ற வெற்றியில் எப்படியெல்லாம் சந்தோஷப்பட்டோம். இன்னும் என்னென்னவெல்லாம் செய்ய வேண்டுமென்று கூறினீர்கள? அப்போதெல்லாம் ''நான் இல்லாத நிலையில் நீங்கள் தான் செய்ய வேண்டும்'' என்று கூறவில்லையே?

உங்களை நாம் பிரிந்த அந்தக் கொடுவாமடுத் தாக்குதலில் தான் எப்படிச் செயற்பட்டீர்கள்? வேகமாக ஓடிச் சென்று எதிரியின் றைபிளைக் கைப்பற்றிக் கொண்டு திரும்பி ஓடி வரும்போது தான் ஆயுதங்களை எமக்குத்தந்த மரணித்த வீரனானீர்கள் நீங்கள்.

''எங்கள் தோழர்களின் புதைகுழியில் மணபோட்டுச் செல்கிறோம்'' - இது தான் நீங்கள் அடிக்கடி விரும்பிப் படிக்கும் - கேட்கும் பாடல். தொண்டையில் சூடுபட்டு உங்கள் குரல் எம். ஜி ஆரின் குரல்போல வந்த பின்னரும் கூட அந்தப் பாட்டைப் பாடுவீர்கள் அதையெல்லாம் இன்று நினைக்கும்போது... உங்களுக்கு மண்போடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. அத்தாக்குதலில் காயமடைந்திருந்ததனால் எனக்கு அந்தச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

நான் சுகமாகி மட்டக்களப்புக்கு வந்ததும் உங்கள் புதைகுழி இருக்கும் முகாமுக்கு வருவேன் அங்கு உங்கள் அபிமானப் பாடலை 'எங்கள் தோழர்களின் புதை குழியில்-'' என்ற பாடலைப் பாடமாட்டேன். நான் பாடப்போவது ''எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்'' என்ற பாடலைத்தான்.

--- வதன்

எனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள்

## ★ நான் எனது தாய் தந்தையுடன் இருக்கும் போது நடந்த துன்பங்கள்

★

1- நான் பிறந்த - இடம் மூதூரில் பின் கிளிவெட்டியில் சில காலமாய் வாழ்ந்தேன். சிறுவனாக இருந்த போது-

1972ஆம் ஆண்டு சிங்களம் தமிழ் என்ற (சேர்வேரா) குழபபத்தினால் நான் எனது தாய் தந்தையுடன் அகதிகளாக வந்தாறுமூலைக்கு வந்தோம். பின் சில வருடம் இருந்தேன். எனக்குச் சகோதரர்கள் - 10 பேர் இதில் அக்கா இரண்டு பேர். எனக்கு அண்ணன் ஒருவர் தான். மற்றவர்கள் தம்பிமார் 6 பேர். எல்லோரும் ஒன்றாக இருக்கும் போது எனது அக்கா திருமணமானார். அதன் பின் அண்ணன் திருமணமாகிவிட்டார். அதன் பிறகு 6 மாதத்தால் எனது அப்பா இறந்து விட்டார். 3 மாதத்தால் எங்கள் ஊரில் கண்ணி வெடி நடந்தது. அதில் எங்கள் வீடு எரிக்கப்பட்டது. நாங்கள் பின் அகதிகளாகி ஓடிச் சென்றோம். கொஞ்சநாள் எங்கள் சேனை வாடியில் எனது தாயுடனும் சகோதரர்களுடனும் இருந்தேன்.

இருக்கும் வேளை எங்கள் எல்லோரையும் அண்ணன் தான் பார்த்து வந்தார். எங்களுக்காக என் அண்ணன் சாமான் எடுக்க ஊருக்குச் சென்ற வேளை ஆமி அண்ணனைச் சுட்டு விட்டான். நாங்கள் கேள்விப் பட்டதும் கத்தினோம்கதறினோம்.

பின் என்ன செய்வது? நானும் எனது அடுத்த தம்பியும் அம்மாவைப் பார்த்து வந்தோம் நான் - ஐந்தாம் வகுப்பில் பள்ளியை விட்டு விலகி நான் குருவிக்காவலுக்குப் போனேன். 1-வருடம் நின்றேன். சம்பளம் எடுக்கேன். அம்மாவிடம் கொடுப்பேன். மற்ற தம்பிமாரை படிக்கவைக்க வேண்டும் என்று கஷ்ரப்பட்டு உழைத்தேன். வெள்ளாமை வெட்டுவேன் வரம்பு கட்டுவேன் இப்படி எல்லாம் மூன்று வருடம் இருந்தேன். எனக்கு அடுத்த தம்பி படித்துக் கொண்டு இருந்தவன் பத்தாம் வகுப்பு பிறகு அவனும் விலகி வேலைகள் செய்து திரிந்தான். எனக்கு உதவியாக திரியும் போது ஒரு வாடிக்கு வேலைக்குச் சென்றான். அந்த நேரம் இந்திய சிவத்தப்பாலத்தைநோக்கிவந்தஇந்திய ராணுவம்எனதுதம்பியைபிடித்து வந்தனர். சிவத்தப் பாலத்துக்கு அவடத்தில் வைத்து வெட்டிக் கொன்றனர்அவ்விடத்தில் தாட்டனர் இந்திய வெறியர்கள். எனக்கு தாங்கத் முடியாத வேதனை!

எனது அம்மா அப்பாவை நினைத்து கத்துவார். அண்ணனை நினைத்துக் கத்துவார். தம்பியை நினைத்துகத்துவார். என்னால் பார்க்கமுடியாது அம்மாவுடன் 5 தம்பிமார் 1-அக்கா இவர்களை நான்விட்டுப்போட்டு 1989-8.10-ஆம்திகதி இயக்கத்தில் சேர்ந்தேன். நான் அம்பாறையில் நடந்த 7-ம் றெயினிங் பெச்சில் எடுத்தேன் மனோ மாஸ்ரர்தலைமையில் றெயினிங் நடந்தது எங்கள் றெயினிங் முடிந்ததும் கண்ணன் குறூப்பில் இருந்தேன். அதேவேளை எனது தாயார் ஒரு வருடத்துக்கு பிறகு என்னை சந்தித்தார். மல்வத்தையில் வைத்து

## லிங்கனைக் காண வந்த கிராமவாசி

அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவரைக் காண வெள்ளைமாளிகையில் சுமார் நாற்பது நபர்கள் வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள் லிங்கன் வந்ததும் கிராமவாசிபோல தோன்றிய ஒருவனை முதலில் தம் அறைக்குள் வரும்படி அழைத்தார். கிராமவாசி உள்ளே வந்ததும் 'நான் இலியனாய்ஸ் மாகாணத்தில் உங்கள் சொந்தக்கிராமமாகிய ஸ்பரிப்பீட்டைச் சேர்ந்தவன் என் சொந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் வெள்ளை மாளிகையில் அமர்ந்திருக்கும் பெருமையைக் காண்பதற்காகவே வந்தேன் கண்டாயிற்று, போய் வருகின்றேன்' என்று எழுந்தார்.

அப்போது லிங்கன், ''இல்லை சற்று நேரம் அமர்ந்திருங்கள்'' என்றார். வந்தவர் 'உங்களைக்காண நிறையப்பேர் வெளியே காத்திருக்கிறார்கள்' என்றார் லிங்கன் சென்ற மூன்று நாட்களாக என்னைப் பலர் வந்து பார்த்தபடி இருக்கின்றார்கள். ஒரு வேண்டுகோளும் இல்லாமல் வெறுமனே பார்த்து விட்டுப் போக மட்டும்வந்தவர் நீர் ஒருவர் தாம் ஆகையால் சற்று அமர்ந்து விட்டுப் பின் போகலாம் என்றார்.

## நண்பனே!

## நீயும் ஆயத்தமா?

ஆசை கொண்ட என் அன்பு நண்பனே
மீசை முறுக்கிடும் இளம் கரங்களில்
ஓசை கொண்ட ஓர் ஆயுதம் ஏந்த உன்
பாசை மீதிலே பற்று இல்லையோ?

காசைப் பார்த்துமே கண்ணை இழப்பதா
தோசை தின்றிடக் கைக் கூலி தருவனோ
ஆசை அண்ணனின் படையில் இணைந்து நீ
மாசைப் போக்கியே தமிழைக் காத்திடு.

பாசம் கொண்ட என் ஆசை நண்பனே
நாசமாகவே போகுது நம் உயிர்
வாச மலர் எல்லாம் வழியிற் கருகுது.
பேசாதிருப்பது உனக்கழகாமோ

நீசர் அழிவினைத் தடுத்திட நீயும்
வேசம் போக்கியே வெளிப்பட்டு எப்போ
தேசத் தலைவனின் வழியில் நடந்திட
நேசம் உடன் நீ புறப்படப் போகிறாய்

நேயம் கொண்ட என் நெடிய நண்பனே
தாயம் வந்தபின் தயங்குதல் தகுமா?
காயம் காத்திட எண்ணியே நீயும்
பாயிற் படுத்து முடங்கிடலாமா?

தாயின் உள்ளம் புரிந்ததோ உனக்கு
ஆயுதம் ஏந்திட ஆயத்தம் தானா
சாயுது பொழுது புலரும் போது நீ
பாயும புலியுடன் இருந்திடல் வேண்டும்.

- க. நரேன்

சிறுகதை

# இரத்தக் கறை

'எடி செல்வி... செ..ல்வி .. விழப்போறாய்டி... விழப்போறாய்டி' என்றவாறு செல்வியின் சைக்கிள் கான்ரிலைப்பற்றிக் கொண்டாள் கௌசி.

'நல்ல வேளையடி... புடிச்சிருக்காட்டி இப்ப இந்தக் குழிக்கதான் கிடந்திருப்பன்' என்றாள் நெஞ்சு படபடக்க.

'அப்பிடி எங்கை கண்ணை வைச்சிண்டு வந்தனீ' என்றாள் கோபமாக.

இவர்கள் கண் வைக்க வேண்டுமென்று தானே அவன் கண்போட்டினால் கணைகளைப் போட்டிருக்கிறான். இது போதாதா?

'என்னடி கௌசி இந்தப் பெரிய குழி..' யார் வெட்டினது.

'ஒருத்தரும் வெட்டையில்லை... இவங்கள் சகடையாலை பீப்பாக் குண்டு போட்டவங்களல்லோ... அதுதான் இந்தப் பெரிய கிடங்குகள்'

'உனக்கென்னண்டடி தெரியும்' 'போன ஞாயிற்றுக் கிழமை வந்தனான் தானே, அப்பஆக்கள் கதைக்கேக்குள்ள தான் கேட்டனான்'

''என்ன ... மணமடி... மூக்கைத் துளைக்கு ?''

''உது செத்த ஆமிக்காரன்ரை 'பொடி' கிடந்த இடம். அது தான் இந்த நாத்தமடிக்குது'' என்றபடி மூக்கைப் பொத்தியிருந்த வேஞ்சியை விடுவித்துக் கொண்டார்.

''இதென்ன...பெரிய ஆறு''

''உது ஆறில்லை ... அகழியடி''

''ஐயோ.. .பார்க்கவேபயமா இருககுடி''

''அப்ப எங்கடயாக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாங்க தெரியுமா?'' என்றபடி பெரியகோட்டையின் வாசற் குகைக்குள் புகுந்து கொண்டனர்.

— 2 —

''டேய் ... ராஜு ... அவங்களைக் கூட்டிக் கொண்டு போய் அந்தச் சாமாங்களை ஒதுக்கி விடன்'' என்றான் சுமன்.

''ஓமண்ணை ...நான் செய்யுறன்''

''செய்யுறனென்டா செதியாப் போவன் சனங்களும் வந்து கொண்டிருக்கு''

'சரிநடவடி'' என்றபடி அவளைப் பொய்க்கோபத்தோடு நுள்ளினாள்.

முதலாவது கொத்தளத்திற்கும் இரண்டாவது கொத்தளத்திற்கும் இடையில் தெரிந்த தூக்கு மேடைக் கம்பமும்சீலிங் பலகைகளால் வேயப்பட்ட அவர்களது (ஆமி) பொயின்ரும், ஆங்காங்கே பசிலன் ரூத்தவுசன் செல்லின் பாற்குளிகளும் சந்திர மண்டல நிலம் போல் காட்சி தந்தது. கோட்டையின் மதிற் சுவரின் சாயலில் இவளது பார்வை அகழியை மண்டி இட்டது.

அதைத் தாண்டி அமைந்துள்ள சின்னக்கோட்டையின் மேற்பகுதி புற்களாலும் சிறு பற்றைக்காடுகளாலும் மூடப்பட்டிருந்தது அதை அண்டி முனியப்பர் கோயிலும், யாழ் நூலகமும், சென்றல் கொலிச்சும் இடையிடையே சிதைந்து காணப்பட்டன. தெற்குப்பக்கமாகத் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். இவர்களது சுற்றுப்பயணம் தொடர்ந்து கொண்டே இருந்தது.

''என்ன ... செல்வி ஒண்டும் பேசாமலே வர்றாய்'?

'எடி...பாத்தியா என்னையும் விட்டுட்டு வந்திட்டாய்' எனப் பொய்க்கோபம் காட்டினாள். - 'அதோட இப்ப நீ நல்லா ஊர்சுத்துறாயாக்கும்'' என்றாள்.

''இல்லேடி ... இவளவையளோடதான் ரியூசன் முடிஞ்சாப் பிறகு வந்தனாங்கள்.''

''போடி ... போடி என்னையும் ... விட்டிட்டு''

''சரிசரி பக்கத்தாலை சனங்கள் போகுது முட்டி மோதிடாமலுக்கு வாபாப்பம்'' என்றாள்.

''எடி ... செல்வி ...உதிலை தான் சைக்கிள் விடுறவையள்''

''எங்கேடி 'பாக்'கார அண்ணையும் காணேல்லை''

''உந்தா வாறார்'' சைக்கிளை உடைந்த அந்தோனியார் கோயிலில்சாத்தி வைத்து விட்டு உடைந்த பொலிஸ் நிலையத்தில் இவர்களது பார்வை கண்ணுற்றது.

''உதாடிகோட்டைவாசல்''

''உது சின்னக்கோட்டை வாசல். உதுக்குள்ள தான் பெரியகோட்டை வாசல்'' செல்வி சில கணங்கள் கௌசியையே நோக்கினாள்.

ஆமோதித்ததைத் தொடர்ந்து மற்றைய போராளிகளோடு வேலையைச் செய்து கொண்டிருந்தனர். இவர்கள் செய்து கொண்டிருந்த வேலைக்கு இடையூறு கொடுக்காத வண்ணம் செல்வியும், கௌசியும் விலகிக் கொண்டனர்.

''இனிஎங்கையடிபோவம்?''

''வாவன் மேலுக்குப் போய் பார்ப்பம்''

''போடிபயமாக் கிடக்குது''

''என்னடி பயம் கீழுக்கு இருக்கிற மாதிரித்தான் மேலுக்கும்''

''அப்ப... வா ... போவம்'' என்றபடி மேல்நோக்கி அமைந்திருந்தபடிக்கட்டுகளில் தடம் பதித்து மேல்மேட்டைச் சென்றடைந்தனர். செல்வியின் கண்கள் ஆச்சரியத்துடன் அகல விரிந்தன. வியப்புக்கள் பெருமூச்சாக வெளியேறியது.

''கெதியா வாவனடி...'' என்று கையைப் பிடித்திழுத்தாள் கௌசி.

''பொறனடி... பார்த்திட்டுப் போவம்''

''இஞ்சை பார் செல்வி ... நீ முதலாவது கொத்தளத்தோடையே நின்டால் மிச்சம் நாலு கொத்தளமும் இன்டைக்குப் பாத்தமாதிரித்தான்''

''என்னத்தையடிபேசுறது... பேசுறத்துக்கு வாய் கூடஅடைச்சுப்போனமாதிரிக்கிடககுது''

ஏன் என்னத்தையும் கண்டு பயந்திட்டியோ?'' என்று பகிடி விட்டாள்,

''எதுக்கடி பயப்படுகிறது,, எங்கடை யாழ்ப்பாணம் இந்தக் கோலத்திலை கிடக்கிறதைப் பார்க்க---- எவ்வளவு வயிற்றெரிச்சலாகக் கிடக்குது தெரியுமே''

''உனக்கு--- இவ்வளவு வயிற்றெரிச்சலெண்டா---- இந்தக் கோட்டையைப் பிடிக்கிறதுக்காக பொடியங்கள் எவ்வளவு வயிற்றெரிச்சலைக் கொட்டியிருப்பாங்கள் தெரியுமா''

''ஓமடி--- அவங்களும் இரவெண்டும் பகலெண்டும் பாராமலுக்கு இந்தக் கோட்டையை அங்க அடிபட்டு இஞ்சை அடிபட்டு பிடிச்சிருக்கிறாங்கள்'' இப்போது மூன்றாவது கொத்தளத்தை அடைந்து விட்டார்கள்.

- 3 -

விரிந்து பரந்த மணற் படுக்கையில் விழுந்து மண்டி இட்டுக் கிடக்கும் பெரும் கட்டடங்களும், எண்ணற்ற துனைகளைத் தன் சிரமத்தின் மேலேற்று அப்பவும் உறுதியாகச் சில கட்டடங்கள் காட்சி தந்து கொண்டிருந்தன, றீகல் தியேட்டரில் இருந்து வீரசிங்கம் ஹோல் வரையாக எத்தனை கட்டடங்கள் கனி விழந்துள்ளன. றீகல் தியேட்டரின் எதிரே அமைந்துள்ள சிலையொன்று கைவேறு தலை வேறுஎனும் நிலையில் சிறு கம்பியின் பிடியில் உரமாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

நான்காவது கொத்தளத்திற்கும் ஐந்தாவது கொத்தளத்திற்குமிடையே சிறு பகுதி மக்கள் கோட்டையை உடைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். இவ்விரண்டு கொத்தளத்திற்குமெதிரே மண்டைதீவுக் கடலலைகள், கோட்டையைச் சுற்றியுள்ள கடற்கரையில் எதிரடித்து மோதுகின்றன. பெரிய லொறி ஒன்று உருச் சிதைந்து ரோட்டின் ஒரு பக்க வாட்டாகப் பெரும் பாதாளம் போன்ற குழிக்குள் சிக்கிக்கிடக்கின்றது. எதிரே கோட்டையின் சாய் சுவரில் சரிந்து கிடந்த சுண்ணக் கற்களும் இவர்களது பார்வையை ஈர்த்தது.

''உதென்னடி--- இந்த லொறி இப்பிடிக் கிடக்குது.

''இதிலை தான் கரும்புலித் தாக்குதல் நடந்தது''

''இதிலையாடி விட்டவையள்!!''

''பாத்தியா எவ்வளவு றைபண்ணி இருக்கிறாங்ளெண்டு''

''இஞ்சைபார் செல்வி ஆமியள்' மண்டைதீவிலை இருந்து வந்து முன்பக்கம் போகேலாதெண்டுதான் காயப்பட்டுத் தப்பி இருந்த மற்றையாக்களையெல்லாம் கூட்டிக்கொண்டு பிச்சை வேண்டாம் நாயைப்பிடி எண்டு ஓடித்தப்பினவை''

''பின்பக்கம் எதாலையடி ஓடினவை''

''வாவன் கீழுக்குப்போய் அந்தக் கேற்றையும் காட்டுறன்'' என்றபடி இருவரும் கீழுக்கு விரைந்தனர்.

— 4 —

கோட்டை உடைத்தலில் வேகமாக உழைத்த மக்களின் சலனத்தால் கடற்கரையருகே தங்கிநின்ற வெண்கொக்குகள் மண்டைதீவை நோக்கி சிறகடித்துப் பறந்தன.

அவர்கள் கீழிறங்கி வரும் போது கோட்டையின் சாய் சுவரினை அண்டி அமைந்திருந்த அகழியின் ஒரு பக்கத்தில் உடைந்து சரிந்திருந்த சுண்ணக் கற்களைச் சுற்றி சில போராளிகள் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் அவர்களைப் பார்த்தபடியே நின்றனர்.

ஒரு போராளி பூரிப்போடு மற்றைய போராளியை அவசரமாக அழைக்கின்றான்.

''டேய்... சுரேன் ... சுரேன்... இங்க ஓடிவா.... உதுக்க என்ன கிடக்கெண்டு பார்'' என்றபடி மல்லாக்க விழுந்து கிடந்த பாரிய கல்லொண்றைக் கஷ்டப்பட்டுப் புரட்டினான்.

உதவிக்கு வந்த சுரேன்,

''ஒரு... 'சிலிங்' ஒன்று தெரியுது மச்சான்'' சந்தோசம் அவனது முகத்தில் கோடிட்டது.

''கிண்டு மச்சான் கிண்டு. சில வேளையிலை றைபிள் ஏதும் கிடக்கும்'' என்று செல்லி வாய் மூடுவதற்குள் றைபிளின் பெரல் பகுதி நீண்டு கொண்டு வெளிப்பட்டது. சந்தோசம் மேலிட்டவனாகச் சுரேன் அதை வெளியே எடுத்தான். இரத்தக் கறைகள் படிந்து காய்ந்துபோய் ஒட்டி இருந்தது. சிறிது நேரம் அந்த மணமே இவர்களுக்கு மூக்கைத்துளைத்தது. மறுகணமே இவனது முகம் இருண்டு கொண்டது.

''என்னடா? சுரேன் என்ன? ஒரு மாதிரியா இருக்கிறாய்'' சுரேன் றைபிளை மிகவும் ஆழமாக அவதானிப்பதைக் கண்டான்.

''இந்த றைபிள் மச்சான் எனக்கு அறிமுகமான றைபிள் தாண்டா'' அழுகை பிட்டுக் கொண்டது.

''என்னடா... என்ன சொல்கிறாய்''

''உண்மையாகத்தாண்டா ! எங்கட குறாப் லீடரா இருந்த கருணாநிதி அண்ணை, அவற்றை றைபிள் தான் ராப்பா''

''அதென்னெண்டுடா இந்த அகழிக்கெ''

''உந்த அகழிக்கை எத்தினை பேர் செத்தவையள் தெரியுமா எட்டாம் மாசம் அஞ்சாம் திகதியளவிலை இரண்டாவது முறை அடிச்சம் தெரியுமே''

''ஓமடா ஓம் ... இப்பதான் ஞாபகம் வருது. அந்த இருபத்தியேழுபேர் செத்த நாள் தானே?

'' ஓம்-- மச்சான்... அதிலைதான் இந்தக் கருணாநிதி அண்ணா செத்தவர்''

''சே... உதிலை ஏர்றத்துக்காக றைபண்ணேக்குள்ளைதான் செத்திருக்கோணும் என நாடியில் கையிட்டவாறு கல்லில் அமர்ந்தபடி கூறினான். சற்றுத்தள்ளி இவர்கள் கதைத்துக் கொண்டிருந்ததைக் கேட்ட செல்வி-

''எடி கௌசி... உங்கட அண்ணாவைப் பத்திக் கதைக்கினம்''

''போடி .. விசரி எங்கட அண்ணா அந்த இருபத்தியேழு பேரோட செத்துப்போச்சுது'' கௌசிக்குகண்கலங்கிவிட்டது.

''அதுதாண்டி இவையளும் கதைச்செண்டுஇருந்தவையள். அந்தத் துவக்கை வைச்சு; இது கருணாநிதி அண்ணையின்ரை துவக்காம்''

சற்றுநேரம் அவர்கள் கையில வைத்திருந்த ரி-81 துப்பாக்கி இரத்தக்கறை படிந்தநிலையிலும் கௌசியின் கண்ணை ஈர்த்தது அதே துவக்குத்தான்.

''எங்கடை அண்ணா ரீ குடிக்கேக்குள்ளை மடியில் பிள்ளை போல் வைத்துக் கொண்டு தான் ரீ குடிக்கும்''

பெருமூச்சு அழுகையாக அவர்களிடத்தில் சென்றது.

''ஏன் அழுகிறீங்க'' என்று கவலையுடன்வினவிய சுரேன் இது கருணாநிதி அண்ணையின் தங்கச்சி என்பதை அடையாளம் கண்டு கொண்டு அந்த றைபிளை எடுத்துக் காட்டினான்' அவர்களது அழுகை அந்த அகழியிலே ஆறாகக் கொட்டியது.

இந்தத் துவக்கு ஏற்றிருக்கும் இரத்தக் கறை கூட நாளைக்கு வரலாற்றில் ஒரு புதிய சரிதம் எழுதத்தான் போகிறது.

★ ★

விடத்தல்தீவு மைக்கல்

---

## உயர் குழாத்தின்

முன்பு தமிழ் மன்னர்களுக்கு விசுவாசமாயிருந்த இந்த உயர்குழாத்தினர், போர்த்துக்கேயர் ஆட்சியை ஸ்தாபித்ததும் பின்பு அவர்களுக்கு இசைவுள்ளவர்களானார்கள். அதன் மூலம் போர்த்துக்கேயரையும் தமது உயர்குழாத்து நலனுக்கேற்ப இசைவாக்கிக் கொண்டார்கள். டச்சுக்காரருக்கும், ஆங்கிலேயருக்கும், பெருமளவுக்கு சிங்கள ஆட்சியாளருக்கும்கூட இவர்கள் அவ்வாறே.

இத்தகைய ஆட்சி மாற்றத்தின் போதெல்லாம் ஒவ்வொரு கட்டத்திலும் இவர்கள் பக்கம் மாறினார்களே தவிர தமக்கென ஒரு புரட்சிகரமான கருத்தோட்டத்தை இவர்கள் கொண்டிருக்கவில்லை. ஆட்சியாளர் தமது நலனுக்கு உகந்த சில புதிய திட்டங்களை (மாற்றங்களை) முன்வைக்கும் போதெல்லாம் இந்தச் சமூக உயர்குழாத்தினர் இருக்கும் சமூக ஏற்றத் தாழ்வுகளைப் பெருமளவு பேணும் வகையில் தான் அவற்றைச் செயற்படுத்துபவர்களாயினர். சமூக விழுமியத்தைப் பெருமளவுக்கு நிர்ணயிப்பவர்களாக இந்த உயர் குழாத்தினர் காணப்படுகின்றனர்.

இந்த உயர்குழாத்தினர் தான் இந்தியத் தலைவர்களையும், பிரித்தானியர்களையும், ஏனைய உலகத் தலைவர்களையும் புனிதர்கள் என்று மக்களுக்கு எடுத்துக் கூறியவர்கள். இதன் மூலம் அரசியலின் உள்நோக்கங்களையும், அரசியலின் உள்ளோட்டங்களையும் மக்களுக்குப் புரியாதவைகளாக்கினர். இவர்கள் மக்களை அரசியல் ரீதியாக ஒரு மாயைக்கு உட்படுத்தி வைத்திருந்தனர். அவ்வாறே தாமும் மாயைக்கு உட்பட்டிருந்தனர்.

இந்த உயர்குழாத்தினர் 1987 வரை இனப்பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவின் பால் பெரும் நம்பிக்கையுடன் இருந்தன. அதுவரை இனப்பிரச்சினை சம்பந்தமான இந்திய அரசின் அரசியற் தீர்மானங்களை ஒரு தர்மகாரியமாகவே எண்ணினர். இந்திய அரசின் அரசியல் உள்நோக்கங்களை இவர்கள் புரியாமை மட்டுமன்றி அதனைப் புரியவும் மறுத்தனர். ஆனால் இந்திய இராணுவம் இலங்கையிற் காலைவைத்துச் சில மாதங்களின் பின்புதான் இந்திய அரசின் உள்நோக்கங்களைத் தெளிவாக உணரலாயினர்.

இந்திய அரசு இராணுவ நடவடிக்கையை தமிழீழ மண்ணில் ஆரம்பித்த பின்புதான் இக்குழாத்தினரின் அரசியல் மாயைகள் உடைந்தன. இந்தியத் தலைவர்களில் பூசையறைப் படங்கள் இவர்கள் மத்தியிற் கேள்விக்குரியதாகியது. திலீபனின் தியாக மரணிப்பும், புலிகளுக்கும் — இந்திய இராணுவத்திற்குமிடையிலான யுத்தமும் இந்தியா தொடர்பானது மட்டுமன்றி ஏனைய உலக நாடுகள் சம்பந்தமான சகல அரசியல் மாயைகளும் சுக்குநூறாக உடைய மக்கள் அரசியலை அரசியலாகவே விளங்கும் யதார்த்த தளத்திற் கால் வைக்கலாயினர். இது மக்களின் அரசியற் கண்ணோட்டத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றமே. இந்த மாற்றம் மட்டும் போதாது; பொதுவான சமூகத்தின் பல்வேறு விடயங்களிலும் பல்வேறு வகையில் புதிய அரசியற் சமூகக் கண்ணோட்டமும் புதிய மாற்றங்களும் தேவை.

---

## சுதந்திரம்

ஓர் அடிமை உறங்கிக் கொண்டிருப்பதை நீ கண்டால் அவனை எழுப்பாதே; அவன் ஒரு வேளை சுதந்திரத்தைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருக்கக்கூடும், என்று என்னிடம் கூறுகிறார்கள்.

நான் கூறுவேன்; ஓர் அடிமைஉறங்கிக் கொண்டிருப்பதை, நீ கண்டால் அவனை எழுப்பி சுதந்திரம்,பற்றி அவனுக்கு விளக்கச் சொல்.

— கலீல் கிப்ரான்

# உயர் குழாத்தின் மூலமாக தமிழ் மக்களின் அரசியல் மனோபாவம்

- மு. திருநாவுக்கரசு

"தன்னை அறிந்துகொண்டால்தான் தன்னிலையை உயர்த்தலாம்" இது ஒரு தனி நபருக்கு மட்டுமன்றி ஒரு சமூகத்திற்கும், ஓர் அரசுக்கும் கூடப் பொருந்தும். அமெரிக்கர்கள் 19ஆம் நூற்றாண்டில் ஜப்பானிற் காலடி எடுத்து வைத்த காலத்தில் ஜப்பானியர் விழிப்படைந்தனர். தம்மைத்தாமே பரிசீலிக்கத் தொடங்கினர். தம் குறை, நிறைகளைத் தாமே கண்டறிந்தனர். தம்மை ஒரு நவீன வாழ்வுக்குத் திசைதிருப்பலாயினர். இதனால் தம்மீது ஆதிக்கம் செலுத்திய அமெரிக்கர்களையே எதிர்கொள்ளும் திறன் உள்ளவர்களாய் மாறினர்.

ஈழத்தமிழரைப் பொறுத்தவரையில் அவர்களுடைய அரசியல் சிந்தனைகள், அரசியல் மனோபாவம், சமூகக் குணாம்சங்கள் என்பன ஆய்வுக்கு உட்படுத்தப்படாதவைகளாகவோ அன்றி தெளிவாகக் கண்டறியப்படாதவைகளாகவோ உள்ளன, இதுபற்றி அடிப்படை ஆய்வுகள் எதுவும் நிகழ்ந்திருக்காத சூழலில் எழுதப்படும் இக்கட்டுரையானது ஒரு சாதாரண அறிமுகமாக மட்டுமே அமையும்.

தமிழ் மக்கள் பழம்பெரும் நாகரிகத்தின் சொந்தக்காரர்கள், ஆனால் நவீன நிலையில் பின்தங்கியிருப்பவர்கள். தமிழ் மக்களின் சிந்தனை ஓட்டத்தை வரலாற்று ரீதியாக ஆராயவேண்டும். தமிழ் மக்களின் சிந்தனையை நிர்ணயிப்பதில் புவியியல் காரணி பிரதான பங்குவகித்துள்ளது. இயற்கை சார்ந்த புவியியல் ரீதியான மாற்றங்கள் பல்லாயிரமாண்டுகால இடைவெளிகளுக்கிடையிலேயே நிகழ்கின்றன. ஆனால் மனிதன் சில நூறாண்டுகால உழைப்புக்களினாலும், கண்டுபிடிப்புக்களினாலும் சிந்தனா சக்தியினாலும் பூமியில் முகத்தோற்றத்தையே வியக்கத்தகுந்தளவு மாற்றியமைந்துள்ளான்.

எனவே மனிதன் புவியியல் மாற்றங்களுக்காக காத்திருக்காது தனது படைப்பாற்றலினால் அவற்றை வெற்றிகொள்பவனாகவும் இருக்கின்றான். இந்திய உபகண்டத்தின் அமைவிடம் காரணமாக அதன் வடமேற்குப் பகுதி அந்நியர்களின் நுழைவாயிலானது 'ஆரியர்' வருகை (படை எடுப்பு) அலக்சாண்டரின் படையெடுப்பு, இஸ்லாமியர் வருகை (படை எடுப்பு) இடம்பெற்றது என்பன குறிப்பிடத்தக்கன. இந்தியாவின் வடபாகத்தில் பரவிப் பெரும் நாகரிகத்துடன் வாழ்ந்த தமிழரின் மூதாதையர்கள் இறுதியில் இந்தியாவின் தென்கோடியில் சுருங்கிக் கொண்டனர். தொடர்ந்தும் வளம்பொருந்திய வடக்கு அந்நியர்களினதும் படையெடுப்பாளர்களினதும் களமாகியது. இவ்வாறாகத் தென்கோடியின் கீழ் உள்ள இலங்கைத்தீவுள்ளும் தமிழர், சிங்களவரின் மூதாதையர் சுருங்கிக் கொண்டனர்.

இந்தியாவின் வடபகுதி அதன் வடமேற்குப் பகுதியால் கிரேக்கம் மற்றும் பகுதிகளுடன் தனது தொடர்புகளை பெற்றுக் கொண்டது இதனால் கிரேக்கத்திற்கும் வடஇந்தியாவுக்கும் இடையில் சிந்தனைப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. ஆனால் இந்தியாவின் தென்பகுதி இதில் முனைப்புற்றிருக்கவில்லை. குறிப்பாக கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம், வாச்சாயனரின் காம சூத்திரம் போன்றன கிரேக்க சிந்தனையின் செல்வாக்கினை கணிசமான அளவு கொண்டிருந்தன. தென்னிந்தியா ஓரளவு வர்த்தகத் தொடர்புகளைத் தவிர சிந்தனா ரீதியாக வெளியுலகத்திலிருந்து பெருமளவுக்குப் பிரிந்தே இருந்தது ஆனால் இத்தகைய போக்கில் திருவள்ளுவருடைய பங்களிப்பு ஒரு முக்கிய மைல்கல் என்றே கூறலாம். அவர் அர்த்தசாஸ்திரம், காமசூத்திரம் என்பவற்றை உள்வாங்கி தனது தென்னிந்திய அனுபவத்துடன் இணைத்து திருக்குறளை எழுதினார். இதனால் கிரேக்கம் - வடஇந்தியா - தென்னிந்தியா என ஒருங்கிணைந்த சிந்தனை வெளிப்பாடாய் திருக்குறள் அமைந்தது. வள்ளுவரின் பின்பு குறிப்பிடக்கூடியளவுக்கு தமிழரின் சிந்தனைச் சங்கிலி நீளவில்லை. ஆனால் வளம் பொருந்திய இலக்கியம் உருப்பெற்றது. செழுமைமிகு நாட்டுப்பாடல்களும் பழமொழிகளும் உருவாகின. கைவினைத் திறன்கள் பெரும் முத்திரைகளைப் பதித்தன. ஆத்மீகத் துறையிலும் பெரும் சிந்தனையாளர்கள் தென்னிந்தியாவில் தோன்றினர். ஆயினும் பொதுவான அரசியல் - சமூகச் சிந்தனைகள் முதன்மைபெறவில்லை ஐரோப்பியரின் ஆதிக்கத்தின் கீழ் மேலும் இவைசீரழிந்தன மேலும் அதிகபாதிப்புடன் இப்போக்கு பொதுவாக ஈழத்தமிழருக்கும்பொருந்தும். தென்னிந்தியா முப்பகுதிகளாலும் கடலால் மூடுண்ட ஒரு பிரதேசம். எமது மண்ணுக்கும் இது பெருமளவு பொருந்தும். இம்மூடுண்ட நிலை சிந்தனைப் பரிமாற்றத்திற்குத் தடையான ஓர் அம்சமாகும்.

இத்தகைய பின்னணியில் வைத்துத்தான், ஈழத்தமிழரின் ஏனைய மேலதிக சூழல்களையும் கருத்திற் கொண்டு அவர்களின் அரசியல் சிந்தனையினையும், அரசியல் மனோபாவத்தையும் புரிந்து கொள்ளல் வேண்டும். அரசியல் கருத்துப் பாரம்பரியம் வெற்றிடமாய் இருந்த சூழலில் காலனித்துவ மனப்பாங்கு இலகுவாகத் தொற்றிக்கொண்டது. அரச, குடும்பத்தினரின் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் அந்நிய எதிர்ப்பு இருந்துள்ள போதிலும், அரசியல் அதிகாரம் அந்நியரின் கைக்கு மாறிய நிலையில் உயர் குழாத்தினர் இலகுவாகவே அந்நியருடன் இசைவாக்கம் பெற்றனர்.

உயர் குழாத்தினர் மிக இலகுவாகவே ஐரோப்பிய மொழிகளைக் கற்று அவர்களின் சேவகர்களாயினர். இந்த உயர் குழாத்தினரின் வாழ்வே சமூக விழுமியமாய் உருப்பெற்றதால் பரந்த மக்களின் எண்ணமும் இதனை அடியொட்டியதாய் அமைந்தது

இந்த உயர் குழாத்தினர் மத்தியிலிருந்து தோன்றிய சேர். பொன் அருணாசலத்திடம் அரசியல் சிந்தனைப்போக்கில் ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டது. இவர் இங்கிலாந்தில் படித்த காலத்தில் அங்கிருந்த பாபியன் - சோஷலிஸ்டுக்களுடனும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆர்வம் காட்டிய இந்திய இளைஞர்களுடனும் நெருக்கமாகப் பழகியதால் அவர்களின் கருத்துக்கள் இவரின் மீது ஓரளவு செல்வாக்குச் செலுத்தின இதனால் இலங்கையில் 910களின் பிற்பகுதியில் ஒப்பீட்டுரீதியில் முற்போக்கான கருத்துக்களை கொண்டிருந்தார். ஆயினும் இவரது கருத்துக்கள் ஒரு மொத்த சமூகக்கருத்தோட்டமாக உருப்பெறவில்லை.

அருணாசலத்திடமும், யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் உறுப்பினரிடமும் இந்திய விடுதலைப் போராட்டத்தின் சிந்தனைகள் செல்வாக்குச் செலுத்தலாயின. அருணாசலத்தையும், வாலிப காங்கிரஸையும் பிரித்தானிய ஆதிக்கச்சக்திகளும், சிங்கள பேரினவாதமும் இணைந்து தோற்கடித்தன. இதன் பின்பு காலனித்துவத்தை அடியொட்டிய சிந்தனையே அரசியல் தலைமைப் பீடத்திலும், சமூகமட்டத்திலும் கோலோச்சலாயிற்று.

மகாத்மா காந்தி தலைமையிலான இந்திய தேசிய போராட்டத்தின் மீதான கவர்ச்சி ஒருபுறமும், பிரித்தானியர் மீதான விசுவாசம் மறுபுறமுமாக இரண்டும் இணைந்த போக்குத்தான் அரசியல் மனோபாவமாய் உருத்திரளலாயிற்று மொத்தத்தில் இந்த இரண்டு கூட்டுச் சேர்க்கையிலும் மரபுவாத பழைமைபேண் தன்மை என்பது ஒரு பொது இயல்பாய் இருந்தது. ஆதலினால் காணப்படும் நிலைமைபேண் தன்மை காணப்பட்டதே தவிர முனைப்பான புதிய சிந்தனை ஓட்டங்களுக்கு இடமிருக்கவில்லை. காணப்படும் சூழலைமீறாது அதனை சுதாகரித்து அச்சூழலில் தனக்கொரு இடத்தைப பிடித்துக் கொள்ளும் போக்கே பொதுவானதய் இருந்தது போக்கை நல்முறையில் மாற்றுவதற்கான சிந்தனை ஓட்டமும் மனப்பாங்கும் உருப்பெறாது போகும் போக்குடன் இணைத்து தன்னையும் நிலைநிறுத்திக் கொள்ளும் ஒரு நிலையே பொதுவாய்க்காணப்பட்டது.

யாழ்ப்பாணத்து மத்தியதர வர்த்தினர் உண்மையில் இடதுசாரிக் கொள்கையின்பால் பற்றுள்ளவர்களல்ல. ஆனால் தென்னிலங்கையை தமது உத்தியோக இடங்களாகக் கொண்டுள்ள நிலையில் இடதுசாரி ஆதரவாளர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்வதோ அல்லது இடதுசாரித் தலைவர்களை திருப்திப்படுத்தும் வகையில் நடந்துகொள்வதோ வழக்கம். இதில் ஓர் இரட்டைத்தன்மை இக்குழாத்தினரிடம் உண்டு. இதனைவிளக்க சுவாரசியமான ஓர் உதாரணத்தை காட்டலாம் பொதுவாக தென்னிலங்கையிலிருந்து சிங்கள இடதுசாரித் தலைவர்கள் யாழ்ப்பாணம் வந்து பொதுக்கூட்டங்களை நடாத்தும் போது படித்த குழாத்திலிருந்து பெருமளவினர் கூட்டங்களுக்குச் செல்வதுண்டு. அவர்களது பேச்சுக்களைக் கேட்டுப் பெரும் ஆர்வமேற்படக்கூடிய வகையில் கைதட்டுவதுமுண்டு. ஆனால் இவர்கள் அவர்களுக்கு வாக்களிப்பதில்லை.

இதனைப்பற்றி கலாநிதி என். எம். பெரேராவின் கருத்தொன்றை கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா தனக்குக் கூறியதாக திரு. சீலன் கதிர்காமர் என்னிடம் கூறியதாவது.

'யாழ்ப்பாணம்சென்று கூட்டம் போட்டால் பல ஆயிரக் கணக்கில் மக்கள் வருவார்கள். ஒரு முறை பெரும் கூட்டத்தினைக்கண்டு சில ஆசனங்களையாவது நாங்கள் (சமசமாயிகள்) கைப்பற்றுவோம் என்று நம்பினேன். ஆனால் ஒவ்வொரு தொகுதியிலும் நூற்றுக்கணக்கிலேயே எமக்கு வாக்குகள் கிடைத்தன. எனக்கு இது ஒரு புதிராகவே இருந்தது. அடுத்தமுறை நிகழ்ந்த தேர்தலிலும் பொதுக்கூட்டங்களைக் கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் வந்தார்கள். தேர்தல் முடிவு சில நூற்றுக்கணக்கான வாக்குக்களையே தந்தது. இந்தவகையில் ஒரு தொகுதியைத்தானும் யாழ்ப்பாணத்தில் (தமிழ்ப்பகுதி) வெல்லமுடியவில்லை. யாழ்ப்பாணத்தவர்கள் வருவார்கள், சிரிப்பார்கள். பேச்சைக் கேட்பார்கள், ஆனால் அவர்களின் மனப்பாங்கை இலகுவில் மாற்றிவிடமுடியாது'' என்று என் எம் கூறினாராம். இடதுசாரித் தலைவர்களை திருப்திப்படுத்தும் இரட்டை வேட உணர்வு ஒருபுறமும், ஆங்கிலத்தில் மேடைப்பேச்சுக்களைக் கேட்கும் ஆங்கில மோகரசனை இன்னொருபுறமுமாகஇப்படித்தகுழாத்தினர் கூட்டங்களுக்குப் போனார்களே தவிர இடதுசாரிகளை ஆதரிக்கும் முகமாக அல்ல.

பருத்தித்துறைத் தொகுதில் கொம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக போட்டியிட்டு 1956ஆம் ஆண்டுப்பொதுத் தேர்தலில் திரு கந்தையா வெற்றிபெற்றார். இவரது வெற்றி உண்மையிற் கொம்யூனிஸ்ட் கட்சிக்கு கிடைத்த வெற்றியல்ல. அது தனிப்பட்டமுறையில் கந்தையாவில் இருந்த தனி மனித ஆளுமைக்குக் கிடைத்தவாக்கே தவிர அவரது இடதுசாரிக் கொள்கைக்கோ, கட்சிக்கோ கிடைத்த வாக்கல்ல.

எமது கருத்தினால் உலகம் சோகமாக உருப்பெற்றது.

ஒருபுறம் பிரித்தானியரின் போதனைகளை கேள்விக்கிடமற்றதாக உள்வாங்கி அதனை மேன்மைக்குரியதாக போற்றியும், பூசிக்கும் நிலை அதனுடன் மறுபுறம் காந்தி, நேரு மற்றும் இந்தியத் தலைவர்களின் கருத்துக்களை உள்வாங்கி அவற்றில் ஒரு சுவர்க்காபுரியை கற்பனையில் காணும் நிலை உருவானது பொதுவில் இந்தியத் தலைவர்கள் புனிதர்களாகவும், அவர்களின் வாக்குகள்மகிமைக்குரியதாயும் ஒரு எல... பெறலாயிற்று. அ... கத்தின் செல்வாக்கு... தாத ஒரு சிறு குழுவ... சாரிகளின் சிந்தனை... அமைந்தன. இவர்களும் மண்ணின் யதார்த்தத்... புரியாத ஒருவகை கற்பனை... பாங்குடையோர் இவர்களி... மும் ஒரு இறக்குமதிச் சிந்தனைக்கப்பால் உயிரோட்டமான ஒரு சிந்தனை தோன்றவில்லை. இவர்கள் மாக்ஸிஸத்தை ஒரு ஜீவநதியாக்காது அதனை ஒரு பண்டமாகவே கையாண்டதால் அது மக்கள் மத்தியில் உயிரற்றதாகியது.

மக்களின் கருத்தோட்டத்தில் ''வெள்ளையன்'' என்றால் மேன்மைக்கு உரியவன் என்றாயிற்று, வெளிநாடு என்றால் உயர்வானது என்றாயிற்று ஆங்கிலம் தேவபாஷையாகக்கருதப்பட்டது. இந்தியத் தலைவர்களின் உருவப் படங்கள் பூசையறைத் தெய்வங்களாகக் கருதப்பட்டன. ஆபிரகாம்லிங்கன், கெனடி போன்றோர் புனிதர்களாகக் கருதப்படலாயினர். பொதுவாக மேற்குறிப்பிட்டவகையிலான அரசியற் தலைவர்கள் மனுசத்தன்மைக்கும் மேலான காவியநாயகர்களாகவும் கேள்விக்கு இடமற்ற புனிதர்களாவுமே பாடவிதானங்களிலும், பத்திரிகைச் செய்திகளிலும், செய்திப்படங்களிலும், சினிமாப் படங்களிலும் சித்தரிக்கப் பட்டதுடன் மேடைப்பிரசங்களும் இத்தகைய கருத்தோட்டத்துடனேயே அமைந்தன. (உண்மையில் 1987 இல் நிகழ்ந்த இந்திய இராணுவத்தின் வருகையும் அவர்களினது செயல்களும்தான் இத்தகைய அனைத்து மோகமனப்பாங்குக்கெல்லாம் ஆப்புவைத்தாற்போல் அமைந்தது. இதனை பிறிதொரு இடத்தில் நோக்கலாம்.) மாக்ஸிஸம் மக்களில் ஊறமறுத்தது. இவை அனைத்துடனும் மண்ணின் இயல்பான குணங்களும் மரவுவழிப்போக்குகளும், சம்பிரதாயங்களும் இணைந்து கொண்டன. ஒத்தோடுதல், சமரசம் செய்துகொள்ளல் போன்ற சுபாவங்கள்தான் சாரசரிப் பண்பாய் உருவானது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னைத் தி.மு.கவுடன் இணங்காட்டிக் கொண்டது. தி.மு.கவின் மொழியுணர்வும், தி.மு.கவின்பாணியும்தமிழரசு கட்சிக்குள் கணிசமான அளவு செல்வாக்குச் செலுத்தின. தி.மு. தலைவர்களுக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கும் இடையில் நல்லுறவுகள் உருவாகின அண்ணாத்துரை, நெடுஞ்செழியன், கருணாநிதி போன்ற தி.மு.க தலைவர்களை தமிழரசுக் கட்சியினர் போற்றி மேடைகளிற் பேசலாயினர். தி.மு.கவும், தமிழரசுக் கட்சியும் ஏறத்தாழ சமகாலத்தவை. இவ்விரு கட்சிகளுனது தோற்றத்திலும் ஏறத்தாழ ஒரு பொதுவான அரசியற் கலாச்சாரப் பின்னணி உண்டு.

சுதந்திரத்தின் பின்னான காலகட்டத்தில் தென்னாசியாவில் அளவாற் பெரிய இனங்களின் அல்லது ஆளும் இனங்களின் ஆதிக்கம் மற்றைய இனங்கள் மீது திணிக்கப்பட்டன பாகிஸ்தான், இந்தியா, இலங்கை ஆகிய அனைத்து நாடுகளிலும் இத்தகைய இன ஒடுக்குமுறை ஒரே மாதிரியானவை. இந்நிலையில் பாகிஸ்தானில் வங்காளிபரும், இந்தியாவில் தென்னிந்தியர்களும், இலங்கையில் தமிழரும் தமது இன உரிமைகளுக்காகப் போராடலாயினர்.

தி. மு. க. வின் திராவிட நாட்டுக் கோரிக்கை தமிழரசுக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# முதலாம் ஆண்டு வீர அஞ்சலிகள்



## மேஜர் ரஞ்சன் (சித்தப்பா)

### (செல்வநாயகம் தயாளன்)

**வடமராட்சி தாக்குதல் படைத்தளபதி**

**வீர ஜனனம்: 17 . 03 . 1968** **வீரச்சாவு 20. 03. 1991**

''வீறு கொண்ட வேங்கைகளின் வீரத்தளபதியே!
தமிழ் மண் காக்க; தமிழினம் மீள தாகத்துடன் தாக்குதல் பல செய்தாயே!
அந்நிய ஆக்கிரமிப்பாளனை ஆட்டம் காண வைத்தாயே
கோட்டை மதிலதில் நின்று தமிழனவன் வீரம் சொரிந்தாயே
காவியத்தாய் பெற்றெடுத்த காவிய நாயகனே சித்தப்பா
தேசத்தை மீட்க தேதி குறித்தாயே! அத்தேதிவர வெகு நாட்களில்லை
ஆனால் அச்சேதி கேட்க நீ இல்லையே........''

உன் நினைவை என்றும் எம் நெஞ்சை விட்டு பிரிக்க முடியாமல் தவிக்கும்
**நண்பர்கள்.**

*சிலாவத்துறை தாக்குதலில் இவருடன் வீரச்சாவை அணைத்துக் கொண்ட அனைத்து வேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூர்ந்து அஞ்சலி செய்கின்றோம்.*

பருத்தித்துறை.


*(2303)*

# தமிழீழத்திற்கு எதிரான மூல தந்திரோபாயத்தில் மணலாறு இராணுவத்தின் பிரதான இலக்கு

மணலாற்றில் கடந்த பதினேழாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஒப்பரேசன் கஜபார புலிகளின் அதிரடி தாக்குதல் ஒன்றினால் பெரும் குழப்பம் அடைந்துள்ளது. இத்தாக்குதலில் இராணுவத்திற்கு ஏற்பட்ட இராணுவ தளபாட ரீதியான இழப்பானது இதுவரைநடந்த மோதல்களில் எதிலும் ஏற்படாததாகும்.

> ''தமிழீழவிடுதலைப் போராட்டத்தின்இருதய நிலப்பகுதியான யாழ்ப்பாண குடா நாட்டையும், தமிழரின் தாயகப் பிரதேசத்தை இணைக்கும் மணலாற்றுப் பிரதேசத்தையும்கைப்பற்றுவதன்மூலம்போராட்டத்தைதோற்கடிக்கவும், தமிழர் தாயகத்தை சிதைத்து விடவும் முடியும் என சிறிலங்கா அரசாங்க- இராணுவ வட்டாரங்கள் கருதுகின்றன''

இச்சண்டையில் முப்பதிற்கும மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லபபட்டனர். 80க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இராணுவத்தினரின் ஆறு கவச வாகனங்களைப் புலிகள் முற்றாக அழித்தனர். இச்சண்டையில் பீரங்கி ஒன்று (ஆர். சி. எல்) உட்பட கனரக ஆயுதங்களையும் புலிகள் கைபபற்றினர்.



## இரகசிய இராணுவ நடவடிக்கை

இந்தஒப்பரேசன் கஜபாரா ஆறாவது கட்ட நடவடிக்கை இறுதிவரை இரகசியமாகவைக்கப்பட்ட ஓர் இராணுவ நடவடிக்கை என்றே சொல்ல வேண்டும். வவுனியாவிலும் யாழ்ப்பாண குடாநாட்டிலும் போருக்கான முஸ்தீப்புக்களை மேற் கொள்வது போன்று காட்டிக்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினர் திடீரென ஒப்பரேசன் கஜபாரா ஆறாவது கட்டத்தைத் தொடங்கினர்.

இந்தஇராணுவ நடவடிக்கைக்கென 3000 துருப்புகளும் சீனத்தயாரிப்பு சண்டை டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள்என்பனவும்பயன்படுத்தப்பட்டன. அத்தோடுவிமானப்படை, கடற்படை என்பனவற்றின் உதவியும் பெறப்பட்டது.

ஒப்பரேசன் 'கஜபாரா'வின் நோக்கம் கொக்குத் தொடுவாய் இராணுவ முகாமில் இருந்து வடக்கு நோக்கி முன்னேறி கரையோரப் பகுதியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதன் மூலம் மணலாற்றுப் பகுதியில் புலிகளுக்குப் பாரிய நெருக்குதலைக் கொடுத்து மணலாற்றுப்பகுதியில் இருந்து புலிகளை வெளியேற்றுவதாகும்.

இதன் மூலம் இரண்டு இலக்குகளை சிறிலங்கா அரசாங்கம் எய்த முற்படுகின்றது. ஒன்று தமிழர் தாயகத்தைத் துண்டாடுவதாகும். இரண்டு வடக்கிலிருந்து கிழக்கிற்கான விநியோக வழியைத் துண்டிப்பதாகும்.

## நீண்டகால ஆக்கிரமிப்பு திட்டம்

மணலாறு மாவட்டத்தை குடியேற்றத் திட்டங்கள் மூலம் ஆக்கிரமிப்பது சிங்கள ஆட்சியாளர்களின் நீண்டகாலத்திட்டமாகும். இதற்கான முதற்திட்டம் மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் ஒரு பகுதியாக முதலில் முன்வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இப்பகுதியில் இருந்து தமிழர் பெருமளவில் விரட்டியடிக்கப்பட்டனர்.

ஆனால், ஆயுதப் போராட்டம் வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து அப்பகுதியில குடியேற்றங்களை நிறுவுதல் பெரும் சிரமமான காரியமானதாக மாறியது. இந்நிலையில் மணலாறு மாவட்டத்தை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிறகுள் கொண்டு வருவதற்கும், அதனைத் தொடர்ந்து குடியேற்றங்களை நிறுவுவதற்கும் அரசாங்கம் தீவிர முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு கட்டமாகவே 'கஜபாரா' ஆரம்பிக்கப்பட்டது.

## இராணுவத்தின் அடிப்படைஇலக்குகள்

சிறிலங்கா இராணுவத்தினதும் அரசாங்கத்தினதும் இன்றைய யுத்த தந்திரங்களும் போர்த் திட்டங்களும்இரண்டு இலக்குகளைப் பிரதானமாகக் கொண்டுள்ளன.

1. யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றுதல்; அதாவது தமிழீழப் போராட்டத்தின் இருதய நிலப்பகுதியை பிடிப்பதன் மூலம் போராட்டத்தையும் புலிகளையும் பலவீனப் படுத்துதல்.

2. மேலே குறிப்பிட்டுள்ள மணலாற்றுப் பிரதேசத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல், இதன் மூலம் தமிழர் தாயகப் பகுதியைப் பிரித்து வடக்கு-கிழக்குப் பிரதேச ஒருமைப்பாட்டையும், தொடர்பையும் துண்டித்தல் ஆகும். இதன் மூலம் கிழக்கில் போராட்டத்தை அழித்து விடுதலாகும்.

இவ்விரு இராணுவ இலக்குகளும் வெற்றி கொள்ளப்படுமானால், தமிழீழப் போராட்டத்தையும், தமிழீழக் கோட்பாட்டையும் வெற்றி பெற்று விடலாம் எனச் சிறிலங்கா அரசாங்கமும், இராணுவமும் கருதுகின்றன,

இவற்றை அடைவதற்காக இராணுவம் பாரிய இராணுவ நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டது. கடந்த வருடம் செப்டெம்பரில் மணலாற்றின் மீது இராணுவம் எடுத்த பாரியபடை எடுப்பின் போது மணலாற்றில் சுமார் ஒருமாதம் வரையில் கடும் சண்டை இடம் பெற்றது. இறுதியில் பாரிய இழப்புக்களுடன் இராணுவம் பின்வாங்க வேண்டி வந்தது. இம்முறை இராணுவம் மேற்கொண்ட படைஎடுப்பு அந்தளவிற்குபெரியஎடுப்பினதாகஇல்லாவிடிலும், இராணுவத்தினரின் இலக்கு பல முகாம்கள் அமைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது

## நன்கு திட்டமிட்ட 'கஜபார'

ஒப்பரேசன் கஜபார ஆறாவது கட்ட இராணுவ நடவடிக்கையானது புலிகளின் புதிய இராணுவவத் தந்திரோபாயத்தை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையாகும்.

தீவகப் பகுதி, பூநகரிப் பகுதி என்பவற்றில் இராணுவ நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட போது புலிகள் நேருக்குநேர் மோதுவதைத் தவிர்த்துக் கொண்டார்கள். அதேவேளை புலிகள் புதிய தந்திரோபாயம் ஒன்றை வகுத்து இராணுவத்திற்குப் பெரும் சேதங்களை ஏற்படுத்தும் மின்னல் வேக அதிரடிகளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடத்தினர். இதனால் இராணுவத்திற்கு பாரிய உயிரிழப்பும், இராணுவத் தளபாட இழப்புக்களும் ஏற்பட்டன.

இத்தாக்குதலினால், கடந்த மூன்று மாதத்திற்குள் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## பரீட்சார்த்த நடவடிக்கை

இந்நிலையில், கடந்த மாத இறுதியில் வன்னிவிக்கிரம III இராணுவ நடவடிக்கையை சிறிலங்காஇராணுவம் மேற்கொண்டது. இந்த இராணுவ நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட வடமாகாண இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பகடுவ இது பரீட்சார்த்தஇராணுவநடவடிக்கை என்றார். இந் நடவடிக்கை புலிகள் என்ன செய்கின்றார்கள் எப்படிச் செய்கின்றார்க்ள் என்பதையும் அறிந்து கொள்ளுதலே நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பகடுவ குறிப்பிட்டதில் ஓரளவு உண்மையுமுள்ளது என்றே சொல்லவேண்டும். வன்னி விக்கிரம III ஓர் பரீட்சார்த்த இராணுவ நடவடிக்கை என்றே கொள்ளலாம். பூநகரி, தீவுப்பகுதிகளில் புலிகள் கையாண்ட தந்திரோபாயத்தையே தொடர்ந்து கைக்கொள்கின்றார்களா என்பதை அறிவதற்கும், சீனாவிடம் வாங்கிய ரி-85 ரக சண்டை டாங்கிகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைக் கண்டறிவதற்கும் இவ்வன்னி விக்கிரமIII பரீட்சைக்களமாக அமைந்தது.

இப்பரீட்சார்த்த நடவடிக்கையின் மூலம் சிறிலங்கா இராணுவத் தரப்பினர் ஓர் பொதுமுடிவுக்கு வந்தனர். புலிகள் பெரும்படை எடுப்புக்களை எதிர்த்துப் போராடும் சக்தியை இழந்துவிட்டார்கள் அலலது தவிர்த்து வருகின்றார்கள் என்பதே அதுவாகும்.

''புலிகள் வடபகுதியில் என்ன செய்கின்றார்கள் என்பதை அறிவதற்காக நாங்கள் காத்திருந்தோம். அவர்கள் செய்தார்கள். அதன்மூலம் எங்கள் தகவல் சரியானது தான் என உறுதிப்படுத்திக் கொண்டோம். எங்களுக்குத் தேவைப்பட்ட தகவல்களை இதன் மூலம் பெற்றுக்கொண்டோம். இதனடிப்படையில் இந்த இராணுவ நடவடிக்கையின் மூலம் நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம்'' என வட பகுதி இராணுவத் தளபதி வன்னிவிக்கிரம III பின் தெரிவித்திருந்தமையைக் கொண்டே இராணுவத்தினரின் நோக்கம் என்ன முடிவு என்ன என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

> பரீட்சார்த்த நடவடிக்கையின் பின் மேற்கொள்ளப்பட்டகஜபாராஆறாவது கட்ட இராணுவ நடவடிக்கை எதிர்பாராத அதிர்ச்சியை இராணுவ வட்டாரங்களில்ஏற்படுத்தியுள்ளது. புலிகளின் பலமும், யுத்த தந்திரோபாயங்களும் அவர்களுக்குத் தொடர்ந்தும் குழப்பத்தை ஏற்படுத்துபவையாகவே உள்ளன.''


## புலிகளின் அதிரடியும் 'கஜபார'வின் குழப்பமும்

வன்னிவிக்கிரம் III படை எடுப்பின் முடிவின் அடிப்படையிலேயே கஜபார ஆறாவது கட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், புலிகளின் தந்திரோபாயம் தீவுப்பகுதியிலும் பூநகரியிலும், வவுனியாவிலும் இருந்தது போன்றும் மணலாற்றில் இருக்கவில்லை.

புலிகளின் எதிர்பாராத அதிரடித்தாக்குதல் 'கஜபார' இராணுவ நடவடிக்கையின் நோக்கத்தை ஆரம்பத்திலேயே சிதறடிக்கச் செய்துவிட்டது. இராணுவம் பெரும் இழபபுககளைச் சந்திக்க வேண்டி வந்தது இது புலிகளின் இராணுவத் தந்திரோபாயத்திற்குக் கிடைத்த ஒரு வெற்றியாகும். அதே வேளை புலிகளின் புதிய இராணுவ பேருபாயத்திற்கு எதிராக சிறிலங்கா இராணுவம் வகுத்த புதிய போர்யுக்திக்கு விழுந்த பலமான அடியுமாகும். இதேவேளை 'கஜபார' இராணுவ நடவடிக்கைத் தோல்வியானது சிறிலங்கா இராணுவ வட்டாரங்களுக்கு வன்னி விக்கிரமIII பரீட்சார்த்த இராணுவ நடவடிக்கையும், மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ குறிப்பிட்டது போல் வெற்றியில்லை தோல்வியில் தான் முடிவுற்றது என்பதை உணர்த்துவதாகவுள்ளது. அத்தோடு, புலிகளின் போர்த் தந்திரம் பிராந்தியங்களுக் ஏற்பவும்,தேவைகளுக்கு ஏற்பவும் மாறுபட்டதாக இருக்கும் என்பதையும், புலிகள் பலம் குன்றிவிடவில்லை என்பதையும் உணர்த்துவதாகவும் உள்ளன.

— ஜெயா —




# மீனவர் குடும்பங்களுக்கு தேவாலயத்தினால் உதவி

(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் வைத்து பங்கு மக்கள் 1,300 குடும்பங்களுக்கும், இடம் பெயர்ந்து வந்துள்ள 232 குடும்பங்களுக்கும் உலர் உணவு மற்றும் உடைகள்-குடிசைகள் அமைப்பதற்கான கிடுகுகள் பங்குத்தந்தை வண-பி. எம். இம்மனுவேல் அடிகளால் வழங்கப்படடு வருகிறது.

உயிரிழந்த - ஊனமடைந்த- இராணுவத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு நிதியுதவியும் வழங்கபபடுகிறது.

இதற்கான நிதியை திருச்சபை நிதியிலிருந்து யாழ் மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண- எம். ஈ. பயஸ் அடிகளார் வழங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (21)

# புலிகளின் தற்கொலைப்படை தமிழகத்தில் ஊடுருவியுள்ளது

## ஜெயலலிதா குற்றச்சாட்டு

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழகத்துக்குள் ஒரு தற்கொலைப் படையை அனுப்பியிருக்கின்றது என்ற தகவலை நேற்றுச் சட்டப் பேரவையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்

ராஜீவ் காந்தியின் கொலையில் ஈடுபட்ட குற்றவாளிகளை மீட்கவும் இந்தக் கொலை தொடர்பாக விசாரித்து வரும் மத்திய சிறப்புப் புலனாய்வுப் பகுதியின் அலுவலகமான 'மல்லிகை'யைத் தகர்க்கவும், தன்னைக் கொலை செய்யவும் தற்கொலைப் படை திட்டமிட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

ராஜீவ் கொலை வழக்கில் ஈடுபட்டவர்களை மீட்கவும், முடியாவிட்டால் தீர்த்துக் கட்டவும் இந்தக் குழு திட்டமிட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இப்படியொரு தற்கொலைப் படை வந்திருப்பதை பொலிசாரும், இராணுவத்தினரும் உறுதிப் படுத்தியுள்ளனர் என்றார். ஆனால் எத்தனை தற்கொலைப் படையினர் இந்தக் குழுவில் இருக்கின்றனர் என்ற விபரம் தெரியவில்லை என்றார்.

சேலம் மாவட்டம் ஏற்காட்டுத் தொலைத்தொடர்புநிலையத்தில் ஏதோ ஒரு சக்தி வாய்ந்த அந்நிய வயர்லெஸ் கருவி குறிப்பிட்டபோது இது தெரிய வந்ததாகக் குறிப்பிட்டார். என்றாலும் இக் கருவி எங்கிருக்கிறது எவ்வாறு இயக்கப் படுகிறது என்பது இன்னமும் மர்மமாக இருக்கிறது என்று குறிப்பிட்ட முதல்வர், பொலிசார் இது பற்றி விசாரித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

புலிகள் தம்மைக் கொலை செய்யப் போவதாகத் திட்டமிட்டிருப்பது பற்றி தாம் கவலைப்படப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பேரவைத் தலைவர் சேரம்பட்டி முத்தையா குறுக்கிட்டு ஆழ்ந்த கவலைதெரிவித்தார்.

முதல்வர் தொடர்ந்து பேசுகையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மத்திய அரசு தடைசெய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

# நெடுமாறன் விவகாரம் சட்டசபை அனுமதி மறுப்பு

(சென்னை)

தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ப. நெடுமாறன் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் வைத்திருப்பது தொடர்பாகச் சட்டப் பேரவையில் பிரச்சினை எழுப்ப முயன்ற எம். ஜி. ஆர். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் எஸ். திருநாவுக்கரசுக்குப் பேரவையின் தலைவர் சேடப்பட்டி முத்தையா அனுமதி வழங்க மறுத்துவிட்டார்.

முன்கூட்டியே தனது அனுமதியைப் பெறாது பிரச்சினையை எழுப்புவது ஒழுங்கற்றது என்று சேடப்பட்டி முத்தையா குறிப்பிட்டார்.

## புலிகளுடன் தொடர்பு?

# இல. கைதான இருவர் இந்தியாவிடம் ஒப்படைப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய தமிழ் நாட்டைச் சேர்ந்த இருவரை சிறிலங்கா அதிகாரிகள் கைது செய்து இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைத்திருப்பதாக இந்திய வானொலி தெரிவித்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கிலும், தமிழ் நாட்டில் புலிகளுக்கு எதிராக உள்ள ஏனைய வழக்குகளிலும் இவர்கள் கைது செய்யப்பட்டது பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் ஆறுமுகம், முரளி ஆகிய இருவரும் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைக்கு தப்பி ஓடியவர்கள் எனவும் அது தெரிவித்தது

**அன்னை**

இப் பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த கலையரசன், பரா, தீவக மக்கள் முன்னணி பொறுப்பாளர் செல்வி அன்பரசி, யாழ் மாவட்டமக்கள் உறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவைச்சேர்ந்த நாவண்ணன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீர ஜனனம் | வீர மரணம் |
|---|---|
| 05 | 20 |
| — | — |
| 05 | 03 |
| — | — |
| 1973 | 1991 |



கொச்சுப்படையான், சிலாபத்துறை முகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்த

## லெப்டினன்ட் தர்ஷன் (புலவர்)

### (யோகசாமி செந்தூரன்)

[முன்னாள் வல்வெட்டித்துறை, தொண்டமனாறு பொறுப்பாளர்)

வீரத்தின் விளை நிலமாம் வல்வையிலே
வந்து உதித்த - செந்தூரா!
தமிழினம் கண்ட இன்னல்களை
பொறுக்காது பொங்கி எழுந்தாய் - புலவா
தானைத் தலைவன் தம்பியின்
தலைமையில் இணைந்த - தர்ஷா
சிலாவத்துறையிலே எதிரியை எதிர் கொண்டாய்
சிதறடித்தாய் எதிரியை!

நீ விதையாக விழுந்தபோது உன் கண்ணை
ஓர் தமிழ் மகனுக்குப் பார்வையாகக் கொடுத்தாய்
நீ மண்ணிலே மறைந்து ஓராண்டு சென்றதையா
நீ மக்களின் மனங்களிலே மலர்ந்தும்
ஓராண்டு சென்றதையா!

ஸ்ரீதரன் வீதி,
(நடராசாவீதி,)
வல்வெட்டித்துறை.

அப்பா, அம்மா, அண்ணன்மார்,
தங்கைமார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

(2312)

**வீரவணக்கம்**

முன்தினம் பகல் வீரவேங்கை ஆண்டாள் (யோகேஸ்வரி கந்தையா - புதுக்குளம், வவுனியா) வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**கடற்**

இந்த நடைமுறையில் மாற்றம் எதுவும் இல்லை என்று அவர் கூறினார்.

நேற்று நடைபெற்ற கடற்றொழிலாளர்களது ஆர்ப்பாட்ட ஊர்வலம் தொடர்பாக விளக்கம் அளிக்கும் போதே அரச அதிபர் இவ்வாறு கூறினார். (க),(பா)

**மட்டு.**

தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதல்களினால் இராணுவத் தரப்பில் பலத்த இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த மோதலின் போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக உலங்கு வானூர்தி ஒன்று 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

இந்த உக்கிர மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

**க. பொ. த.**

சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் அந்தந்தப் பகுதி பிராந்தியகல்விப்பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விசேட பரீட்சைக்கு 10 ஆயிரம் மாணவர்கள் தோற்றுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




பாடசாலைகளில்

# தமிழீழ தாயகப் படம் நேற்று திரைநீக்கம்

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் தமிழீழத் தாயகப்படம் நேற்று திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தமிழீழத்தின் சிறார்கள் தேசிய தமிழீழத்தின் பாரம்பரிய பிரதேசத்தை அறிந்து கொள்ளும் முகமாக பெரியளவிலான தமிழீழத் தேசியப் படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது.

அனைத்துப்பாடசாலை அதிபர்களும் நேற்றுக்காலை 9.00 மணியளவில் இத்தாயகப் படத்தை திரை நீக்கம் செய்து வைத்தனர். திரைநீக்கம் செய்யும் இவ்வைபவத்தில் அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தாயகப் பிரதேசமடங்கிய விளக்கவுரையும், கருத்துரைகளும் இடம் பெற்றது.

**நினைவுக்**

கூட்டமும் இடம்பெற உள்ளன.

பொதுக் கூட்டத்தில் இளையவன், மதிவாணி, வாஞ்சிநாதன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். அதனைத் தொடர்ந்து சின்னமணி குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

**நிவாரணம**

பட்ட கடற்றொழிலாளர்கள் இணைந்து இவ் ஊர்வலத்தை நடாத்தினர். காலை 9 30 மணியளவில் மானிப்பாய் அந்தோனியார் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் பிரதான வீதி வழியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் அலுவலகத்தை அடைந்தது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவரும் இவ் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். சண்டிலிப்பாய் பிரதான வீதியில் மறியல் செய்யப்பட்டது. இதனால் அலுவலக அலுவல்கள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

இதைத் தொடர்ந்து பதில் பிரதேச செயலாளர் அங்கு கூடியிருந்த கடற்றொழிலாளர்களிடம் இரு வாரங்கள் நிவாரணம் வழங்கப்படும் என உறுதி வழங்கினார்

மங்களகரமான திறப்பு விழா!

இன்று (20-03-92) காலை 6.24 முதல் 7.34 வரை தொடர்ந்து

★ ஆங்கில மருந்து வகைகள்
★ பால் மா
★ பாடசாலை உபகரணங்கள்
★ மற்றும் உங்கள் வீட்டுப்பாவனைக்குரிய அழகு சாதனப் பொருட்கள்

மொத்தமாகவும்
சில்லறையாகவும்

இதே இடத்தில் பெற்றுக்கொள்ள

மருந்து பால்மா வகைகள்

(தனியார்) வரைவுள்ளது

(Drugs & Milk Foods) (Pvt) Ltd

484, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

❁ இன்னும் மேல்மாடியில் பற்சிகிச்சையும், வைத்திய நிபுணர்களின் ஆலோசனை நிலையமும் திறந்து இன்று முதல் சேவைகள் வழங்கப்படும்.

(சி 4073)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.